[illegible]

JL
ം211, N12GIN
N12.
H; 2-2-95.
142392

142392

*Supplement to the "Hithakarini."*

THE

# GNANACHANDRIKA

**A series of books published in monthly parts in Tamil, devoting to the Dissemination of Ancient and Modern Religion, Philosophy Fiction etc.**

**Vol. 1 February 1912 No. 2**


(1) தத்வவிளக்கம்

(2) நிரஞ்சனை (ஓர் நவீனம்)

(3) பர்த்ருஹரி (ஓர் நாடகம்)


வருஷ சந்தா 1-4-0] [தனிப்பிரதி அணா. 4

EDITED AND PUBLISHED BY

PANDIT VISALAKSHI AMMAL,

MYLAPORE, MADRAS, S.

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஞான சந்திரிகா

## உபதேசக் கிரமம்

பிரம்ம வித்யா ஸாதனத்தை ஸாமான்ய மனிதர்கள் தெரிந்து கொள்வதென்றால் ஸாத்யமா? மனோவ்யவஸாயம், வைராக்யப் பிரியம், ஈச்வரபக்தி ஆகிய இவைகளால் அறிவு விசாலிக்கும். அறிவால் ஆத்யந்த ரகஸ்யங்கள் வெளியாகும். ஞான ஸம்பத்தைப் பெற்றவர்களே நித்யாநந்தர்களாவர்.

தேவதைகளும், தைத்யர்களும் மனிதர்களும் பிரம்ம வித்யா ஸாதனம் அறிந்து கொள்ளவேண்டி பிரம்மாவிடம் சென்றனர். அவர்களின் கருத்தை யுணர்ந்த ஸிருஷ்டிகர்த்தா சிஷ்யர்களாய் ஏற்றுக் கொண்டார்.

அனேக நாட்கள் சென்றன. பிரஜாபதி ஒரு நாள் அஸுரர்களையும், தேவர்களையும் அழைத்து "இன்று உங்களுக்கு உபதேசிக்கப் போகிறேன். நீங்கள் கவனத்துடன் கேட்டு அதன்படி நடப்பீர்களாக" என்று கூறி "த" என்ற அக்ஷரத்தை உச்சரித்தார். சற்றுநேரம் மௌனமாயிருந்து,

"தேவதைகாள்! நான் சொன்னதைக் கேட்டிருப்பீர்களே! என்னுடைய அபிப்ராய மென்னவென்று சொல்லுங்கள்" என்று வினவினார்.

ஸுரர்கள் தங்களுக்குள் யோசிக்கலாயினர். "நமக்கு இயற்கையிலேயே யௌவன மிருப்பதால் அஜரரென்றும், (நரையில்லாதவர்) அமரரென்றும் பெயர் பெற்றிருக்கிறோம். காமதேனு, கல்பகவிருக்ஷம், சிந்தாமணி முதலிய அபூர்வப் பொருள்களால் நாம் கோரும் விஷயங்கள் பூர்ணமாகின்றன. போக இச்சையில் திருப்தியுள்ள மனம் தேனீ ஒரு பூவிலிருந்து மற்றொரு புஷ்பத்தைத் தேடிச் செல்வது போல் ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்தை நாடி ஸஞ்சரிக்

கிறது. ஆகையால் இந்திரியங்களுக்கு வசமாகாதீர்கள் என்று இவ-
ருடைய அபிப்பிராயமிருக்கும்போல் தோன்றுகிறது" என்று வணங்கி

"தர்மமே சிரேஷ்டமான ஸாதனம் போலும். தர்மத்தை அனு-
ஸரித்தவன் ஆத்மஞானத்துக்கு அருகனாகிறான். தங்கள் அபிப்-
பிராயம் ஸரியாயிருக்குமா? என்று வினவ"

பிரம்மா தலையசைத்து, ராக்ஷஸர்களைநோக்கி "நீங்கள் கேட்ட
அக்ஷரத்துக்கு அர்த்தம் கூறுவீர்களாக" என்று கேட்டார்.

அவர்களும் சற்று யோசித்து "ஆசிரியரே! அஸுரர்கள் ஸ்வ-
பாவத்தில் தன்னலம் கோருபவர்கள். தங்கள் மனஸைத் துஷ்டிக்க
பிராணிஹிம்சை செய்யத் துணிவார்கள். அவர்கள் எதுவரையில்
ஜீவஹிம்ஸாகாரியங்களை விடுகிறதில்லையோ அதுவரையில் புத்தித்
தெளிவை அவர்கள் பெறப் போகிறதில்லை. ஆதலால் "த" என்றால்
தயையே உத்கிருஷ்டமான ஆத்மஞானமென்று மொழிந்தீரென்று
எண்ணினோம்" என்று விளம்பினார்கள்.

இதற்கும் முகத்தையாட்டி மனிதர்களை ஸம்போதித்துப் பொருள்
கேட்டார்.

ஐயா! நாலோகத்தில் துன்பமே அதிகம். இன்பம் தலைகாட்டி
மறைகிறது. மனிதர்கள் ஸுகஸாதனங்களைச் சேர்த்துவைக்கப் பற்பல
விதமாய்ப் பிரயாசப்படுகின்றனர். இதனால் ஆசை அதிகரிக்கிறது.
ஆசையால் துக்கமுண்டாகிறது. துக்கத்தில் ஸுகம் கிடைப்பது அரிது.
விஷயங்களை ஆச்ரயித்து ஸுகத்தைப் பெறலாமென்று பிரயத்னப்-
படுவது முதலையை மரக்கட்டை என்றெண்ணி நதியைக்கடக்க நினைப்-
பவன் காரியத்துக்கு ஸமானமாகும். நித்யஸுகத்துக்குக் காரணமான
ஆத்மஞானத்தை ஸம்பாதிக்கவேண்டுமானால் "த" என்ற தங்கள்
திருஅக்ஷரத்துக்குத் தானம் செய்வது என்று அர்த்தங்கொண்டு அப்யா-
ஸிக்கத் துணிந்தோம். போக்யர்களையும், ஸஹாயத்தை விரும்புவர்களை-
யும் உள்ளவர்களுக்கு சக்திக்கேற்றவாறு தானம் செய்வதில் இரண்டு
விதலாபம் கிட்டும். பெற்றுக்கொண்டவனுக்கு உண்டாகும் ஸந்தோஷ-
மொன்று. வாளுமான் தனத்தில் தனிகன் மனதைச் செலுத்திப் பாபத்-
தில் மூழ்கிப் பாமரர்க்க மறியாமல் பாழாகாவண்ணம் தப்பித்துக்கொள்





வது மற்றொன்று. ஆகையால் மனிதர்களுக்குத் தானமே பரமஸாதன-
மென்று தோன்றுகிறது" என்று மொழிந்தார்கள்.

பிரம்மாவின் வாக்கிலிருந்து வந்த அக்ஷரத்துக்கு மூன்றுவித-
மாய் அர்த்தம் கற்பிக்கப்பட்டது. தேவர்களிடம் அதிகமாயிருந்த
தோஷம் விஷயஸுகமென்றும், அஸுரர்களிடம் பிராணி ஹிம்சை
குற்றமென்றும், மனிதர்களிடம் ஆசை தப்பிதமென்றும் கருதப்பட்டன.

மூன்று தோஷங்களுக்கும் பரிஹாரம் அவசியம். பகவத்கீதையில்
கூறியுள்ளபடி "காமம், குரோதம், லோபம்" இம்மூன்றும் நரக
வாசல்கள். இவைகளைக் கையாள்பவன் நாசமாகிறான். இவைகளை
விட்டு "தமம், தயை, தானம்" ஆகிய மூன்றையும் அனுஷ்டித்து
வருவானாகில் மோக்ஷ ஸித்தியைப் பெறுவனாகிறான். சத்தமைய விஷ-
யங்களையும் மனமே அரசாய்நின்று ஆண்டுவருகிறது.

## சித்த சுத்தி

மனமே இந்திரியங்களையும், சரீரத்தையும் விளக்கும். பீஷ்மாசாரி-
யர் தர்மராஜனுக்குத் தர்மோபதேசம் செய்கையில் "குழந்தாய்! நம்-
முடைய இந்திரிய சேஷ்டைகளெல்லாம் மனதின் வல்லமையால் உண்-
டானவை" என்று நிரூபித்தார். மனமோ கஷ்டத்தை விரும்புகிற-
தில்லை. தற்காலத்தில் ஸந்தோஷமடையும் ஸ்வபாவமுள்ளது.
தீர்க்க ஸாதீர்க்கயமுள்ளவர்கள்கூட சிற்சில ஸமயங்களில் மனம் மாறு-
பட்டு வழுக்கும். மனம் நல்வழியில் சென்றால் பரிசுத்தம் பெற்று
ஞானஸித்தியையடைய ஆவல்கொள்ளும். இந்திரிய வியாபாரங்-
களுக்கு மூலமான மனதை நிர்மலமாய் வைத்துக்கொள்வது மானவர்-
களின் முதல் கடமை.

மகான்கள் உபதேசிக்கும் முன் மனம் வைத்துக் கேட்கவேண்டு-
மென்று ஆவல் உண்டாகிறது. சித்தசுத்தி யிருந்தாலன்றி அத்விஷ-
யங்கள் மனதில் செல்லா. இயற்கையிலுள்ள உத்தம ஸ்வபாவத்தை ஒவ்-
வொரு நாளும் விருத்திசெய்துகொண்டுவரும் அப்யாஸத்தைக் கைக்-
கொள்ளவேண்டும். நிர்மலமான மனம் பெற்றுள்ளவர்களிடம் துஷ்-
டர்கள் தலைகாட்டவும் பயப்படுவார்கள்.

பகலில், இரவு எதிர் நிற்குமா? இரண்டும் ஏககாலத்தில் ஓரிடத்-
தில் நில்லா. சித்த சுத்தியைச் சீர்திருத்தப் பிரயாஸப்படுவோர்களை

உத்தமர்கள். ஜீவகாலத்தை நல்வழியில் செலவிட என்னுவோர்கள் மனதில் உறுதி செய்து கொள்ளவேண்டும். ஸங்கல்ப பலத்தால் எந்தவித காரியங்களும் நிறைவேறுகின்றன. சக்தி, காலம், பலன், ஆகிய இவைகள் உறுதியால் கிடைக்கின்றன. ஈச்வான் விசாலமான பிரபஞ்சத்தை உண்டாக்கினதாகத் தைத்திரியோபநிஷத்து கூறுகிறது. ஆத்மா தான் கேட்பதாகவும், பார்ப்பதாகவும் ஸங்கல்பித்துக்கொண்டவுடன் பார்க்க, கேட்க, ஸ்பர்சிக்க அவயவங்கள் ஏற்படுகின்றன என்று உபநிஷத்துக்கள் தெரிவிக்கின்றன. மனம் பரிசுத்தமாயிருக்கவேண்டுமானுல் "நான் பவித்திர முள்ளவன்" என்று திருட ஸங்கல்பம் செய்துகொள்வது உசிதம்.

சித்த சுத்திக்கு ஸத்ஸகவாஸம், நீதி, படனம், முதலியவைகள் அவசியம். நதியின் ஜல மெல்லாம் ஸமுத்திரத்தில் சேராவண்ணம் கால்வாய்களை வெட்டி நீரைப் பெருகவிட்டுப் பல தேசங்களை யுண்டாக்குவதுபோல் ஸத்ஸகவாஸம், ஸத்யவாக்கு, நீதிபோதம் ஆகிய இவைகள் மனதை நல்வழியில் திருப்பி அபாரமான சக்தி, புத்தி, ஆலோசனைகளைக்கொடுத்து ஆத்மஞானத்தை யுண்டாக்கும்.

மகான்கள் எழுதிவைத்த மகத்கிரந்தங்களைப் படித்தால் அவர்களின் வசனங்கள் மனதில் சென்று அபார ஆனந்தத்தை விளைக்கின்றன. அவர்களை அந்தரங்கத்தில் தர்சிப்பதுபோல் தோற்றும். அவர்களுக்குண்டான அபார சக்திகளெல்லாம் பனே உறுதியால் கிடைத்தவை.

## பக்தி

பரமனிடம் பிரேம ரூபமாயும், அமிருத ஸ்வரூபமாயும் உள்ளது பக்தியேயாகும். ஒரு வஸ்துவால் க்ஷணிக ஸுகம் கிடைக்குமாயின் அதனிடம் அபாரமான விச்வாஸமுண்டாகிறது. அநித்யமான வஸ்துவிடம் மனம் கட்டுப்பட்டிருக்கையில் நித்யாநந்தரிடம் பிரியம் வைத்தால் அதற்குக் குறைவுண்டாகுமோ? பரந்தாமனிடம் காயமனோவாக்குகளால் பக்தி பாராட்டுவோர்களுக்கு ஆனந்த பதவி கிட்டும். அமிருதத்தை யுண்டவர்களுக்குச் சாவு, தாழ்வுகள் கிடையா! பக்திரஸம் அருந்துவோர்களுக்குப் பரமேச்வரனுடைய பரிபூர்ண கடாக்ஷம் கிட்டும்.





அஷ்ட ஸித்திகளைப் பெறுவதென்றாலென்ன? (1) அணிமா, (2) மகிமா, (3) கரிமா, (4) லகிமா, (5) பிராப்தி, (6) பிராகாம்யம், (7) ஈசத்வம், (8) வஸித்வம் ஆகிய இவைகளே அஷ்ட ஸித்திகளெனப் படும். எட்டுக்கும் பொருள்களைக் கவனித்தால் ஆச்சர்யமா யிருக்கும். (1) அதிக ஸூக்ஷ்மமாகுதல், (2) பிரம்மாண்டத்தை ஆவரித்தல், (3) அதிக நிறையுடனிருப்பது, (4) கனமற்றிருப்பது, (5) விரல் நுனிகளால் வெகு தூரத்திலுள்ள சந்திராதிகளை ஸ்பர்சித்தல், (6) இச்சா பூர்த்தி, (7) ஸ்தாவர வஸ்துக்களை இஷ்டப்படி நடத்தல், (8) இந்திரியங்களை ஸ்வாதீனமாக்கிக் கொள்ளுதல். பக்தியால் நித்யஸுகம் கிடைக்கும். ஜெனனமரணாதிகளால் துன்ப மடையாமல் திருப்தியுள்ள நிலைமையைப் பெற ஹேதுவாகும்.

நித்யஸுகம் கிடைத்தவர்களுக்கு வேறொரு வஸ்துவைப் பெற இஷ்டமிராது. துக்கமற்ற ஆநந்த நிலைமை. பக்தியோ அதிகப் பெருமையைப் பெற்றுள்ளது. பக்தி ஸ்வரூபத்தை யறிந்தவர்கள் ஸுகப்பிரதமான ஆத்ம சிந்தையில் அபிமானம் கொள்வார்கள். பார்ப்பவர்களுக்குப் பக்திமான்கள் பித்தரைப்போல் தோற்றுவது வழக்கம். அவர்கள் செய்யும் வேலைகள் பூலோகத்தில் முடிந்ததால் ஓரே இடத்தில் நின்று தியானத்திலிருப்பார்கள்.

சாஸ்திரம், வேதம் முதலியவைகளில் சொல்லியுள்ள கர்மங்களைத் திரஸ்கிம் செய்வது நிரோதமாகும். எல்லாக் கர்மங்களுக்கும் காமமே மூலமானது. இச்சையில்லாதவன் காரியங்களைச் செய்யான். ஒருவன் கோரின வஸ்து கிட்டுமாகில் சிலநாள் ஆசை அடங்கியிருக்கும். மற்றொரு நூதன ஆசை ஏற்பட்டு அவன் மனதைக் கலக்கும். மேன்மேலும் உலக வஸ்துக்களில் மனம் சென்றுகொண்டும், ஆசை அதைத் தாண்டிக்கொண்டும் காலத்தைக்கழிக்க நேரிடும். கர்மத்தைச் சேர்க்கும் மார்க்கமேயன்றி அதை நிவர்த்திக்கும் வழி ஏற்படவில்லை. ஆநந்த ஸ்வரூபனை ஆத்மாவிடம் பக்தி ஏற்பட்டாலன்றிப் பாஹ்யவிஷயங்கள் தொலைவது கஷ்டம்.

ஆச்ரயம் பெறவேண்டுமானுல் ஈச்வரனையே தேடவேண்டும். பரமேச்வரனுடைய பாதாரவிந்தத்தை ஒருமுறை தியானித்தால் உள்ளம் பூரிப்படையும். சேற்றில் நடப்பவன் கோலைநம்பி அதனிடம் தன்

பாரத்தைச் செலுத்தி அடிவைப்பதுபோல் ஸம்ஸாரத்தில் ஓடியாடும் பக்தன் பரமனையே நம்பி நடப்பான். இதுதான் ஏகநிஷ்டை எனப்படும்.

பக்திமான்கள் பக்தியின் லக்ஷணத்தைப் பற்பலவிதமாய் வர்ணித்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றைக் கூறுவோம்.

1. பகவத்பூஜை செய்வதிலுள்ள பிரியமே பக்தியாகும் என்றுரைத்தார் வியாஸபகவான்.

2. பரமனுடைய கீர்த்தனை, புராணங்களைக் கேட்பதிலும், பஜனை, பிரஸங்கங்களைச் செய்வதிலுமுள்ள விருப்பமே பக்தியாகும் என்று கூறினார் கர்க்காசாரியர்.

3. எல்லாக் கர்மங்களையும் ஈச்வரனுக்கு அர்ப்பிதமாய்ச் செய்வதும், அவரை மறந்தபொழுது துக்கிப்பதும் வெகு சிலாக்கியமான பக்தியாகும் என்றார் நாரதரிஷி.

பகவான் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ஜுனனுக்கு விச்வரூபதரிசனம் காட்டின பிறகு சொன்னது "பல்குன! வேதம், தபம், தானம், என்னும் முதலியவைகளால் கடவுளை நினைப்பதுபோல் பார்க்கமுடியாது. ஆனால் ஒப்புயர்வற்ற பக்தியால் ஈசனை எளிதில் காணலாம். ஞானம், யோகம், கர்மம் ஆகிய இம்மூன்றுக்கும் பக்தியே பலமாயிருக்கிறது."

அஹங்காரி தன்னிஷ்டம்போல் நடப்பான். விவேகம் உதிக்குமாயின் பகவானிடம் பிரியங்கொண்டு பக்திசெய்யத் தொடங்குவான். கருணாகரர் யாரிடமும் பக்ஷபாதம் பாராட்டுவதில்லை. பக்திரஸத்தை யறிந்தவர்களுக்கே பரமேச்வரனுடைய மகிமை விளங்கும்.

அரசன் ஸர்வ சிரேஷ்டனென்று ஜனங்களால் கொண்டாடப் படுகிறான். ஒவ்வொருவரிடமும் தயவு பாராட்டுவதென்றால் அவனால் ஸாத்யமில்லை. அவனைச் சேவித்து வருவோர்களுக்குப் பிரிய மேற்படுகிறது. பக்வமான பதார்த்தங்களின் பெயரைத் தெரிந்துகொண்டால் மட்டும் பசி நீங்காது. அவைகளை மென்று தின்றால் திருப்தி, ருசி முதலியவைகள் ஏற்படும். இவ்விதமே வாய் வேதாந்தம், வெளி வேஷம் முதலியவைகளுக்குப் பலன்கள் கிடைக்குமென்று அறியவும்.

விஷயத்தையும், ஸங்கத்தையும் விடுவதால் பக்தியுண்டாகும்.





கண், காது, முதலான இந்திரியங்களின் காரியங்கள் எந்த வஸ்துவிடம் செல்கிறதோ அதற்கு விஷயமென்று பெயர். விஷயத்தியாகமென்றால் வஸ்துவிடமுள்ள ஆசையை நீக்குதல். ஸங்கம் என்பதற்குப் பொருள், பகவானிடம் நாம் வைக்கவேண்டிய நேசம், அவரிடம் நேசங்கொள்ளாமல் ஸாமான்ய ஜனங்களுடன் உறவாடுவதை நீக்கவேண்டுமென்பதே ஸங்கத்தியாகமாகும். பக்திக்கு முக்யஸாதனம் மனத்தெளிவும், மகான்களின் அருளும், ஈசனுடைய கிருபையும் ஏற்படவேண்டும். உலகத்தில் மனிதராய் ஜெனிப்பதும், மகான்களின் ஆச்ரயம் பெறுவதும், மோக்ஷத்தில் அபேக்ஷையுண்டாவதும் மிகவும் கஷ்டமானவை. இவைகளைப் பெற ஈச்வரனுக்கிரகம் அவசியம் வேண்டும். மஹத்ஸங்கம் பக்திக்கு முக்யமானது. மற்ற செயற்கையை விடுவதுபோல் இதை நீக்கக்கூடாது. மகான்களானவர்களின் கண்களிலகப்படுவது கஷ்டம். அவர்களின் நேசம் கிடைப்பதும் துர்லபம். கிடைத்தால் பெரும்நிதி பெற்றதற்கொப்பாகும். பரமாத்மாவின் அருளால் பக்திமான்கள் முக்தியடைவார்கள்.

துஸ்ஸங்கத்தால் அனர்த்த மேற்படுகிறது. காமக்ரோதாதி விஷயங்கள் ஆரம்பத்தில் சிறியதாயிருந்தாலும் கெட்ட ஸகவாஸத்தால் அலைகள் கூடி ஸமுத்திரமாவதுபோல் பிரமாதமாகும். ஸம்ஸார மாயையைத் தாண்டவிருப்பவர் மகாப்பிரபுவை ஸேவித்து மோகத்தையகற்றிப் பிரம்ம தியானத்தில் அமரவேண்டும்.

ஏகாந்தவாஸம், விருப்பு வெறுப்பற்ற மனம், ஸத்வரஜோதமோ குணாதிகளைக் கடந்த நிலைமை ஆகிய இவைகளே பகவானுக்குப் பிரியமானவைகள். எந்தக் கர்மம் செய்தாலும் ஈச்வரார்ப்பணமென்று கூறி பலனைக் கோராமலிருப்பது ஞானஸாதகமாகும். ஊமை உண்ட பதார்த்தங்களின் ருசியைப் பிறரிடம் சொல்லி வர்ணிக்க முடியாது. பக்திமான் மனங்கனிந்து ஈசனை நினைந்துருகி அதனால் கிடைக்கும் பலனை அன்யரிடம் அறிவிக்க முடியாமலிருப்பான்.

பக்தியிலுள்ள பிரேமம் முக்குணங்களால் விடப்பட்டுச் சுத்தமாயிருக்கும். காமத்திலிருந்து விலகினதால் ஒவ்வொரு நிமிஷத்திலும் அபிவிருத்தியடையும். சற்றுநேரம் நில்லாது. இந்திரியங்களால் அறிய முடியாது. அனுபவ ஸ்வரூபமானது. பக்திப்பிரேமத்தைப் பெற்றவன்

அதையே பார்ப்பான். கேட்பதும் அதைப்பற்றியே. தியானிப்பதும் அதைக்குறித்தேயாகும். சாந்தியைக் கொடுக்கும் பக்திக்கு ஆர்த்தனமென்று பெயர்.

உலகம், வேதம், ஆகிய இவைகளைப் பக்திமான் பரமாத்மாவிடம் அர்ப்பித்து விடுகிறான். ஈச்வரனைச் சேர்க்க பொருளிடம் யோசனை வருவானேன். பக்தி சித்திக்கும்வரை லௌகீக கர்மத்தை விடலாகாது. கர்மபல இச்சையை நீக்கவேண்டும்.

அவிவேக வார்த்தைகளைக் கேட்டு மயங்குபவர் பக்திமான்களல்ல. ஷண்முகர், வியாஸர், சுகர், சாண்டில்யர், கர்க்கர், விஷ்ணு, கௌண்டின்யர், சேஷர், உத்தவர், ஆருணி, பலி, ஹநுமந்த, விபீஷணர், ஆகிய இவர்களெல்லாம் பக்தியில் பிரஸித்தி பெற்றவர்கள். இவர்களின் ஜீவகாலமெல்லாம் பரமாத்மாவின் தியானத்திலேயே கழிந்தது. மானவர்களின் ஜென்மம் பாவனமாக வேண்டுமானால் பக்திசெய்வது அவசியம்.

### தானம்

பவ ஸமுத்திரத்திலிருந்து கரையேற வழியுண்டா என்று ஜனங்கள் தவிப்பதுண்டு. தியானம், தாரணம், ஜெபம், தபம், முதலிய ஸத்காரியங்கள் உள. இவைகளில் தானமும் ஒன்றாகும். யோசித்துப் பார்த்தால் இதைவிட மகிமையுள்ளது வேறொன்றில்லை என்று விளங்கும். தானத்தால் பரோபகாரமும், ஈச்வரபூஜையும் ஏககாலத்தில் கிடைக்கின்றன. ஆரிய தர்மோபதேசகர்கள் ஒவ்வொரு காரியத்துடனும் தானத்தைச் சேர்த்து விவரித்திருக்கிறார்கள்.

பகவான் கொடுத்துள்ள பொருளை ஸத்விஷயத்தில் விநியோகப்படுத்த எல்லோருக்கும் மனம் வராது. அநேகர் தனத்தைக் காணும்தோறும் உடல் பெருத்து உள்ளம்பூரித்து எள்ளளவும் செலவிட மனமிசையாமல் இரும்புப்பெட்டியில் வைத்துப்பூட்டி அதை யாரும் கொண்டுபோகாவண்ணம் தங்கள் சரீரத்தைக் காவலாய் வைக்கின்றனர். மனிதர்களுக்கு ஜீவிக்கப் போதுமான பொருளை வைத்துக்கொண்டு மிகுந்ததை பரோபகார விஷயத்தில் செலவிடுவதல்லவோ உத்தமமாகும். ஈச்வரன் ஏராளமான பொருளை மனிதனிடம் எதற்காகக் கொடுத்தார். தரித்திரநோய் பிடித்தவர்களுக்குப் பரிஹாரம் செய்யுமாறு தனத்தை அளித்தாரென்று எண்ணுமலிருப்பது தர்மமா?



# நிரஞ்சனா

## பெயரில்லாப்பெண்

"மனமே! சற்று அமைதியாயிரு. அவஸரம் வேண்டாம். மயக்கம் தெளிவாயாக. பொறுமையுடன் கவனி. என்ன நடக்கிறது பார். விசேஷ விஷயங்களை அறிந்துகொள்ளலாம்" என்று கவனித்தாள் ஓர் மாது.

"நான் 12 பிள்ளைகளைப் பெற்றவள். உம்மை அன்புடன் நேசித்தேன். காமத்தால் என்னை வசமாக்கிக் கொண்டீரென்பதை அப்பொழுது அறியவில்லை. நானும் தங்களைக் கோபித்து விரட்டினேன். போனது போகட்டும். இப்பொழுதாவது என்னுடன் வருகிறீர்களா?" என்று 50 வயதுள்ள ஓர் [illegible] ஸுமார் 65 வயதுள்ளவயோதிகர் ஒருவரைக் கேட்டாள்.

கிழவர் மிக தந்திரி. அவளைப் பார்த்து ஓர் விதமாய்ச் சிரித்து "மாயக்கள்ளி! என்னை மயக்க வந்தாயோ! உன்னைப்போல் எத்தனை பெண்டிர்களை நான் அறிவேன். உன் முகத்தில் கிழட்டுத்தனம் குதித்துத் திரிகிறதே. இதைக் கண்டோ உன்னுடன் வருவேன்? ஓடிப்போ." என்று கூறி தன் பக்கத்திலுள்ள ஓர் சிறுவனை நோக்கி "இராமசந்திரா! துளிர் வெற்றிலை, ஸாரப்பாக்கு, முத்துச் சுண்ணாம்பு, வாஸனை திரவியங்கள் ஆகிய இவைகளைக் கொண்டுவா! சந்தனத்தில் பன்னீர் முதலிய பரிமளவில்லைகளைக் கலந்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

சிறுவனும் வயோதிகரின் மனம்போல் வேலை செய்துகொண்டிருந்தான்.

விருத்தர் சயனத்துக்குச் சென்றார். பையன் விசிறிக்கொண்டிருந்தான்.

நாமம் போட்டுக்கொண்டிருந்த மூன்று ஆட்களும், விபூதியணிந்த மூவரும், மூன்று ஸ்திரீகளும், நான்கு குழந்தைகளும் கிழவர் படுத்துக்கொண்டிருந்த அறைக்கு வெளியில் நின்று இரகஸ்யமாய்ப் பேசலாயினர்.

"இவனிடம் சென்றால் நம்மைக் கண்ணெடுத்தும் பாரான். கிழவனை அழைத்து வரும்படி எஜமானுடைய கட்டளையாயிருக்கிறது. என்ன செய்யலாம்" என்று எல்லோரும் ஆலோசித்தார்கள்.

விபூதி பூசியிருந்த ஒரு வயோதிகன் கையிலொரு தடியை வைத்துக்கொண்டு "தம்பிகளே! அதோ பாருங்கள். ஒரு ஸ்திரீ படுத்திருக்கிறாள். அவளிடம் சென்று நமது ஆட்ட அபிநயங்களைக் காட்டுவோம். பிறகு நமது காரியம் கைகூடும்" என்று கூறினான். எல்லோரும் சரியென்று ஆடலாயினர்.

"ரங்கபதே பாஹிமாம்" என்ற பல்லவியைப் பாடிக்கொண்டு கால்களைத் தலைவரையில் தூக்கிக் கழிகளைச் சுழற்றி காட்டுமனிதர்கள் குதிப்பதுபோல் குதித்தும், கர்ஜித்தும், உம்கார, அம்காரங்களால் அபிநயித்தும் நின்றார்கள். அவர்களுடன் வந்த மூன்று ஸ்திரீகளும் தலையில் கையை வைத்துப் பிரேதங்களைப்போல் அழுதுகொண்டிருந்தனர். அந்தகாரத்தில் இரவு 2 மணியில் இந்தக் காட்சி நடந்தது.

நல்ல நித்திரையிலிருந்த ஓர் மானிட மங்கை இவைகளைக் கண்டு ஆச்சரியமுற்றாள். காரணம் தெரியாமல் மௌனமாய் ஆலோசித்துத் தலையை ஆட்டிக்கொண்டிருந்தாள்.

கூத்தும் பாட்டும் ஒருவாறு முடிந்தன. கோமளாங்கி பொறுமையுடனிருந்ததைக் கண்ட மாதர்கள் பிரமித்து "அம்மா! குழந்தாய்! நாங்கள் யார் தெரியுமா?" என்று வினவினார்கள்.

"அம்மா! தாங்கள் யாரோ அறியேன். இந்த இரவில் என் தந்தையைத் தொந்திரவு செய்ய வந்தவர்களாகத் தோன்றுகிறது. அவரிடம் தாங்கள் என்ன வேலையாய் வந்திருக்கிறீர்கள். அதைத் தெரிவிக்க முடியுமானால் ஆவலுடன் கேட்கிறேன்" என்றாள் பாலிகை.

"பாலிகாமணியே! சிறுமியான உன்னிடம் நாங்கள் என்ன சொல்லப்போகிறோம். கண்ணே! உன் தந்தை நாங்கள் மூவரையும் மணந்தவர். வஞ்சனையால் எங்களை வருத்தினார். அவருடைய காலமெல்லாம் ஸ்திரீ லோலாப்தியில் கழிந்தது. இப்பொழுது விருத்தராயிருக்கிறார். எங்கள் ஜென்மம் பாவனமாக அவருக்குச் சிசுருஷை செய்ய மனங்கொண்டு இவ்விடம் வந்தோம். ஸ்திரீகளுக்குப் பதியே தெய்வமென்று பகுத்தறிவோர் கூறியுள்ளார். ஆகையால் அவரைத் தேடி அடைந்தோம்." என்று உரைத்தார்கள்.

"அம்மணிகளே! ஒருமனிதன் நான்கு மனைவிகளை விவாகம்செய்து





கொண்ட தெங்ஙனம்? ஒரு ஸ்திரீயிருக்கையில் மற்றொரு மாது அவரை மணக்க இஷ்டப்படுவாளா?" என்று சிறுமி கேட்டாள்.

"குணவதியே! அவருடைய சாமர்த்தியத்தால் நான்கு கல்யாணங்கள் நடந்தன. ஒரு மனைவியை மணந்து சில வருஷங்கள்வரை அவளோடிருந்து பிறகு தேசாந்தரம் சென்று வருவதாய் வேறொரு ஊருக்குச் செல்வார். அவ்விடத்திலுள்ள ரூபவதிகளில் இஷ்டமானவளை விரும்பி விவாகம் செய்துகொள்வார். முன்போலவே அவளையும் விட்டு மற்றொரு தேசம் நடப்பார். வஞ்சனையறியாத மாதர்கள் இவருடைய வடிவழகைக் கண்டு நெஞ்சிக் காதலிப்பார்கள். குழந்தாய்! தெரிந்ததா உன் தந்தையின் விந்தைவிவாகம்" என்று மொழிந்தார்கள்.

பெருமூச்சுவிட்டாள் பெண்மணி.

அவள் பேசாதிருந்ததைக் கண்டு ஒருமாது "கண்ணே! உன் தாயார் எங்கே!" என்று கேட்டாள்.

கண்களில் நீர் ததும்பிற்று. கன்யாமணி வாய் திறக்கவில்லை.

"அம்மா! பயப்படாதே! சொல். எங்களால் ஆகும் சகாயத்தைச் செய்கிறோம்." என்று அன்புடன் பேசினாள்.

"அம்மா! என் தாயார் ஸதா நித்திரையிலிருக்கிறார். அவருக்குப் பூலோக நினைவே கிடையாது. நாம் பேசினாலும் காது கேட்காது. அவர் நித்திரையிலேயே சிலகடிதங்கள் எழுதுவதுண்டு. அவைகளைப் படித்துக்கொண்டு நான் நடந்துகொள்ளவேண்டிய மார்க்கத்தைத் தெரிந்துகொள்வேன். பிதாவின் மனம் ஒருவிதமாயிராது. அவர் தமக்குத் தோன்றினவாறு நடப்பார். வீட்டுக்காரியங்களை நான் செய்துகொண்டு தாய் தந்தையரின் க்ஷேம லாபங்களைக் கவனித்து வருகிறேன். இன்று நீங்கள் சொன்ன ஸமாசாரங்களைக் கேட்க எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது" என்று கன்னிகை கூறினாள்.

"குழந்தாய்! உன்னைப் போஷிக்க வேறு மனிதர்களில்லையா? உன் தாய்க்கு நோய் வந்து எத்தனை நாட்களாயின" ஸம்ஸாரத்தை வஹித்துச் சேவைசெய்பவரில்லையா? என்று மற்றொரு ஸ்திரீ கேட்டாள்.

"தாய்மார்களே! நான் இந்த வீட்டை விட்டுத் தனியே வெளியிற் செல்லமாட்டேன். மாதம் பிறந்தவுடன் தந்தைக்கு 30 ரூபாய் வருகிறது. சிறுவனைக்கொண்டு ஆகாரசாமான்களைக் கடையிலிருந்து

வாங்கி வரும்படி சொல்வார். நான் அவைகளைச் சீர்படுத்தி வேளா வேளைகளில் அன்னபானாதிகளைச் செய்து தாய் தந்தையர்களுக்கு போஜனமளிப்பேன். நான் பந்துக்களை அறியேன். எனக்கு நினைவு வந்தது முதல் என் தாயார் நித்திராவஸ்தையிலேயே யிருக்கிறார்?" என்று அங்கனை சொன்னாள்.

"கண்ணே! உன் பெயரென்ன" என்று முதல் மாது கேட்டாள்.

"என்னைப் பெயரிட்டு இதுவரையில் யாரும் அழைத்ததில்லை; என் தந்தையும் பெயர்வைத்துக் கூப்பிடுகிறதில்லை. அவருக்கு ஏதாவது தேவையாயிருந்தால் "குழந்தாய்" என்றழைப்பார். வேலைக்காரப் பையன் "அம்மா" என்று கூறுவான். மற்ற மனிதர்களோடு நான் பேசுகிறதுமில்லை. அவர்களும் என்னுடன் வசனிப்பது கிடையாது" என்று கன்யாமணி மொழிந்தாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ஒருவரை யொருவர் பார்த்துத் திகைத்தார்கள்.

"இந்த இருளில் நீங்கள் எப்படி வந்தீர்கள்? என் தந்தைக் கதவைத் தாளிடுவதுடன் பூட்டியும் வைத்திருப்பார். அவர் திறந்தால் உண்டு. இல்லையேல் கதவு மூடியிருக்கும். உங்களைக் கண்டவுடன் கவாடத்தை அவர் திறந்தது ஆச்சர்யமே" என்றாள் பாலிகை.

"ஆம் கண்ணே! அவரே திறந்தார். நாங்கள் வருவதாய்த் தெரிவித்திருந்தோம். எங்கே உன் தாயைக் காட்டு. அவளுடைய பரிதாப நிலைமைக்கு ஏதாவது சிகித்சை செய்ய முடியுமானால் முயற்சிப்போம்" என்று அவளை அன்புடன் அணைத்து மூவரும் கேட்டார்கள்.

"தந்தை கோபித்தால் என் செய்வேன். அவரைக் கேளாமல் எந்தக் காரியமும் செய்யக்கூடாது" என்று கூறினாள் கன்னிகை.

வந்த மாதர்கள் கிழவர் படுத்திருக்கும் இடம் சென்றார்கள்.

பெண்மணியும் மெதுவாய் நடந்து பிதாவிடம் போனாள். "யார் அங்கே?" என்று கர்ஜனையோடு கிழவர் எழுந்து ஒவ்வொரு ஸ்திரீயையும் அடிக்கலானார். கன்னிகைக்கும் பிரஹாரம் கிடைத்தது. தாளாதவளாய் மூர்ச்சித்தாள். ஹா! ஹா! ஹா! என்ற ஓசை கேட்டது. விளக்கு அணைந்தது. அங்கிருந்த ஆட்கள் கிழவரைப் பிடித்துக்கொண்டார்கள். பெண் மணியை யாரோ தூக்கிக் கொண்டதுபோல் தெரிந்தது.





## துன்பத்தில் இன்பம்

பகல் வேளையானதால் வெயிலின் கொடுமையை மனிதர்கள் ஸகிக்கக்கூடவில்லை. சந்திரனைப்பழித்த ஓர் சாருமதி முகத்தில் வியர்வை யொழுகக் கையில் ஓர் மூட்டையுடன் பெங்களூரைச் சார்ந்த கண்டோன்மெண்டுக்குச் சென்றுகொண்டிருந்தாள். அவளுடைய மனதில் பற்பல எண்ணங்களுண்டாயின. கம்பீரமான நடை, கருணையுள்ள பார்வை, கோமலமான தேகம், ஆகிய இவைகள் முனிவரையும் வசீகரம் செய்யும். ஆடம்பரமில்லாத பரிசுத்த உடையுடுத்தி யிருந்தாள். வயது 15-க்குள் இருக்கும். என்று நினைக்கும்படி யிருந்தது. ஏதோ கவலைப்படுபவள் போல் தோற்றினாள். ஸுந்தரி எங்குசெல்கிறாளென்று ஊகிக்கவும் முடியவில்லை.

அவசர அவசரமாய் நடக்கலானாள். ஓர் பங்களாவைக் கண்டவுடன் ஸமாதானத்துடன் நின்றாள். தன் கையிலிருந்த காகிதத்தை அங்குள்ள தோட்டக்காரனிடம் கொடுத்து உள்ளே சென்று உத்தரவு வாங்கி வரும்படி அனுப்பினாள். தோட்டக்காரன் சற்று நேரத்தில் திரும்பிவந்து "அம்மா! உங்களை எஜமானி வரச்சொன்னார்" என்று கூறினான்.

கன்யாமணி அவன் காட்டும் வழியே நடந்து மேல்மாடிக்குச் சென்றாள். பிரபு வீட்டுக்குரிய பல சித்திரப் படங்களும், சித்திர விசித்திரமான மரஸாமான்களும், கடியார தினுஸுகளும் இருந்தன.

சாய்வுநாற்காலியில் ஓர் மாது ரத்னாபரணமணிந்து உத்தமமான பட்டாடை யுடுத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளருகில் 22 வயதுள்ள ஓர் வாலிபன் நின்று விசிறிக் கொண்டிருந்தான்.

நவீனப்பெண்ணைக் கண்டதும் பிரபு ஸ்திரீ "பெண்ணே! என்ன கொண்டுவந்திருக்கிறாய்?" என்று அட்டஹாஸத்துடன் கேட்டாள்.

பாலிகைக்குக் கோபமும், துக்கமும் ஒரே தட்வையில் உண்டாயின. ஆனால் வெளியில் காட்டவில்லை.

வணக்கத்துடன் "அம்மா! தங்களைப்போன்ற ஸ்ரீமதிகளும், குழந்தைகளும் உடுத்தும் பற்பல பட்டுவஸ்திரங்களில் ஜரிகைப்பூவேலை செய்த உடைகளிருக்கின்றன. தாங்கள் விரும்பும் மாதிரிகளைக்

காண்பித்தால் அவ்விதமே செய்துகொடுக்கப்படும்" என்று பாலிகை சொன்னாள்.

"உம். அப்படியா! உன் பெயரென்ன? சொல் என்றாள் பணம் பெற்ற மாது.

என்னை "லலிதா" என்று அழைப்பார்கள் என்று கூறினாள் கன்னிகை.

ஓர் விதமாய்ச் சிரித்துப் "பெயரைப் பார்! துரைமக்களுக்கு வைக்கும் மாதிரியை அனுசரித்திருக்கிறது. ஏழைகளுக்கே அதிக கர்வம். ராஜாம்பாள், கமலம், பத்மம், தங்கம், தர்மம், கோகிலம், குந்தளம், ஸீதா, ஜோதி என்று அந்தஸ்துள்ளவர்களைப்போல் அழைப்பார்கள். ஸரி கிடக்கட்டும். உன் மூட்டையைப் பிரி. பார்ப்போம்" என்று கூறினாள் கர்வமுள்ள காரிகை.

"நான் ஏன் இங்கு வந்தேன். இவ்விதம் பிழைப்பதைவிட உயிர் மாய்த்துக்கொள்வது நலம். இப்பொழுதே திரும்பிச்செல்லவா" என்று எண்ணினாள் லலிதா.

இதற்குள் விசிறிக்கொண்டிருந்த வாலிபன் ஹே! ஹே! என்று நகைத்து "அக்கா! அக்கா! மூட்டையிலிருப்பதைக் கண்டால் நீ காறித்துப்புவாய். உன் கையால் தொடவும் யோக்கியதையில்லாத துணிகள். அடித்து விரட்டு" என்று கர்ஜித்தான்.

ஸரி ஒழியட்டும். ஏதாவது கொடுத்தனுப்பு. அவள் துணிகளை அவளே எடுத்துச் செல்லட்டும். பெட்டியிலிருந்து 2 ரூ. கொண்டு வா! என்று கொத்துச்சாவிகளை எடுத்தாள்.

இவள் கெட்ட கேட்டுக்கு 2 ரூபா எதற்கு. ஒன்றும் கொடுக்க வேண்டாம். போனால் போகிறது. 4 அணா தருகிறேன் என்று கூறினான் வாலிபன்.

அம்மா! தங்களுக்குப் பிரியமில்லாவிடில் என் துணிமூட்டையோடு நான் திரும்பிச்செல்லுகிறேன். எனக்குப் பணம் வேண்டாம் என்று மூட்டையோடு எழுந்தாள் சிறுமி. என்னடீ! கர்வம். நில். துரைசானியின் கடிதத்துக்காவது நான் மதிப்புவைக்க வேண்டாமா என்று அதட்டினாள்.





லலிதா அவள் கூறியதைக் கவனியாமல் மாடியிலிருந்து கீழே இறங்கினாள்.

சீ! கழுதை. அதிகப்பிரஸங்கி! தம்பீ! அந்தச் சிறுக்கி என்னை அவமதிக்கிறாள். நீ அவளைப் போகாதபடி தடை செய் என்று கூறினாள் பிரபு ஸ்திரீ.

முரடன் ஓட்டமாய் வந்து லலிதாவைத் தடுத்தான்.

ஐயா! தனவானே! என்னைத் தொந்திரவு செய்யாதீர். நான் இருட்டும் முன் என் வீடேகவேண்டும். என்று கூறினாள்.

துஷ்டன் அவளை லக்ஷ்யம் செய்யாமல் தன் கைகளால் தள்ளினான். லலிதா ஓர் சுவரின்மேல் விழுந்தாள். தலையில் அடிபட்டது. பொறுத்துக்கொண்டு "ஐயா இனி இவ்விதம் செய்யாதீர்! வழியை விடும்" என்று கண்ணீர்பெருக கீழே இறங்கினாள்.

மூர்க்கன் அவள் தலைப்பின்னலைத் தன் கையால் பிடித்துக் கரகரவென்று இழுத்தான்.

ஐயோ! அம்மா! அநாதையின் கெதி இதுவோ என்று அலறினாள் லலிதா.

சீ! நாயே! வாய்திறந்தால் உதை விழும் என்று பிரபு ஸ்திரீ வெடுக்கென்று பேசினாள்.

ஈசா! ஈசா! என்று தேம்பி அழுதாள் பெண்மணி.

இதற்குள் ஜோடு போட்டுக்கொண்டு நடப்பதுபோல் ஓசை கேட்டது.

ஐயா! தர்மாவதாரமே! என்னைக் காப்பாற்றும் என்று கூவினாள் லலிதா.

யார் அழுவது? என்று கேட்டுக்கொண்டே ஓர் புருஷன் மேலே வந்தான். அவனைக் கண்டவுடன் வீட்டு எஜமானியும் அவள் தம்பியும் விலகினார்கள்.

வாடிய முகத்துடன் வனிதை கண்ணீர் சொரிவதையும், அவளைப் பார்த்து இருவர் சிரிப்பதையும் கண்ட பிரபுத்வபுருஷன் சினங்கொண்டு "கல்யாணி என்ன நடந்தது? ஒளியாமற் சொல்லுகிறாயா? இல்லையா?" என்று கோபத்தோடு கேட்டான்.

ஐயா! புண்யவானே! அவர்களின்மேல் குற்றமில்லை, என்று

டைய மதிஹீனத்தால் நானிங்கு வந்தேன். கிருபைகூர்ந்து என்னை இந்த வீட்டிலிருந்து அனுப்புங்கள் என்று லலிதாவிநயத்துடன் வேண்டினாள்.

அஞ்சாதே! இனி உனக்குப்பயமிராது. நடந்ததை ஒளியாமற் சொல்லென்று கேட்டான்பிரபு.

லலிதபேசவில்லை. பிரபு பலமுறை வினவியும் பிரயோஜனமில்லை. பாலிகையின் முகத்தைக் கண்டு மனமிரங்கி வா என்னோடு என்று அவளை அழைத்தான்.

லலிதா மனஸ் ஸமாதானத்துடன் பிரபுவின் பின்னோடுசென்றாள்.

கேட்டுவரையில் பேசவில்லை. தெருவில் வந்தவுடன் லலிதா அவ னைப் பார்த்து "தயாளுவே! தங்களால் என்மானமும், பிராணனும் இன்று பிழைத்தன. நான் செல்கிறேன்." என்று கூறி நடந்தாள்.

பெண்ணே! எங்கேபோகிறாய்? அவஸரப்படாதே! யுவதியான நீ தனியே செல்வது அழகல்ல. உன்னிருப்பிடமெங்கே? நான் உன்னோடு துணை வருகிறேன் என்று கனவான் கேட்க,

ஐயா! எளியவள்மீது பக்ஷம் பாராட்டுவது தங்களைப்போன்ற வர்களுக்கு ஸஹஜகுணமே! தரித்திரையான நான் என் குடிசைக்குப் போகிறேன். அநாதையான என்னோடு தாங்கள் துணைவருவது தக்க தன்று. இருட்டும்முன் நான் வீடுசேரவேண்டும். உத்தரவு கொடும் என்று கூறினாள்.

குணவதியே! பயப்படாதே. நீ என் வீட்டுக்கு வந்தவிதமும், நடந்த ஸம்பவங்களையும் கூறினாலன்றி உன்னை எங்கும் போகவிடேன். உன்னுடைய போஷகர்யார்? அவர் பெயரென்ன? அதை விவரமாய்ச் சொல் என்றான் தனிகன். லலிதா என்ன செய்வாள். தன் விருத்தாந் தத்தைச் சொல்லியே தீரவேண்டுமென்று நிச்சயித்தாள். ஐயா! என் ஜென்மசரித்திரம் சொல்லும்முன் ஓர் வரம் கேட்கிறேன். அதை மறுக் காதபடி நிறைவேற்றும். என்வீட்டுக்குச்செல்வது முதல்காரியம். பிறகு தங்களுக்குப் பதிலுரைப்பது இரண்டாவதுவேலை என்று பணிவுடன் கூறினாள்.

"உன்வீடு இங்கிருந்து எவ்வளவு தூரமிருக்கும்? என்று கன வான் கேட்க,



# பர்த்துருஹரி

## முதல் அங்கம்

### முதல் காக்ஷி

இடம்.—விக்ரமாதித்யனுடைய அரண்மனை.

காலம்.—மாலை.

பானுமதி சிந்தித்த வண்ணமாய் வஸந்த வனத்தில் உட்கார்ந்திருக்கிறாள். தோழியான நந்தினி பர்த்துருஹரியின் தாய் தந்தையர்களின் ஜீவனகால ஸம்ப வங்களைப் படித்துக் காட்டுவதாய்ச் சொல்லுகிறாள்.

ந.—அம்மணீ! தாங்கள் பகலில் வரைந்த விஷயங்களைப் படிக் கிறேன். கவனித்துக் கேளுங்கள். பிழையிருந்தால் தெரிவிக்க வேண்டு கிறேன்.

பா.—ஸகி! என் மனம் துன்புற்றிருக்கிறது. எதைப் பார்த் தாலும் வெறுப்பே உண்டாகிறது. சித்திரமெழுதத் தொடங்கினேன். சலிப்புண்டானதால் நிறுத்தினேன். வாத்யமெடுத்தேன், வேதனை தோன்றிற்று. பாட வெண்ணினேன். பர்த்தாவின் உருவம் காணாததால் பைத்யம் பிடித்தவளைப்போல் விழித்தேன். தையல் வேலை செய்ய லானேன். தயங்கித்தயங்கி ஊசியைக் குத்தினேன். பதியின் ஸகோதரர் களின் மனைவிகள் என்னை விளையாட அழைத்தார்கள். பல்லைக் கடித்து உடல் பதற என் பிராணநாதரில்லாமல் எங்கும் வரமாட்டேனென்று கூறினேன். ஒன்றிலும் விருப்பமில்லை.

ந.—தேவீ! எல்லாம் தெரிந்த தாங்களே இவ்விதம் வருந்தினால் தேறுதல் சொல்ல யாரால் முடியும். அரசர்கள் சத்துருக்களை ஜெயிப் பதற்காக அடிக்கடி வெளியே போவது வழக்கமென்று தாங்கள் அறிந் திருக்கிறீர்களல்லவா? விசாரத்தைவிடும். க்ஷேமமாய் வருவார் கோம கன். அவருடைய அபார ஸாமர்த்தியங்களுக்கு முன் இந்திரனும் எதிர் த்து நில்லான். தைரிய புருஷரான அவரை ஒருவரும் வெல்ல முடி யாது. ஜெயத்துடன் திரும்புவார். அம்மணீ! சோகப்படாதீர். ராஜ ஸ்திரீயாயிருந்தும் கலங்கலாமா? நீதியை யறிந்த வநிதாரத்னமே! உமக்கு மங்களமே உண்டாகும்.

பா.—நந்தினீ! என் உள்ளத்தை நீ யறியாமற் பேசுகிறாய். நான் உன்னிடம் சொல்லுகிறேன் கேள். ஸர்வ பிரதிஷ்டையில்லாத கோவி

விருந்தென்ன? ராஜனில்லாத நகரம் சோபிக்குமா? குருவில்லாத வித்தை பிரபலிக்குமா? புத்தியில்லா மனிதன் உலகத்திலிருந்தென்ன? தர்மமில்லாத நரனைத் தெய்வம் ஏற்குமா? பதியில்லாத ஸதியைப் போற்றுவார்களா? அவருடைய ஸேவை செய்யாமல் என் அங்க அவயவங்கள் இருந்தென்ன? யுத்தத்திலும், ரணகளங்களிலும், வீட்டிலும், காட்டிலும் விட்டுப் பிரியேனென்று பிரமாணம் செய்த புருஷர் என்னைத் தனியேவிட்டுச் சென்றாரே! ஓர் இரவு பர்த்தாவை விட்டுப் பிரிந்தால் பாதிவிரத்யதோஷமுண்டாகுமென்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது. காரணார்த்தமாய்ச் சென்றவர்களுக்குத் தோஷமில்லையென்று கூறினாலும் ஒரு நாளா? இரண்டு தினமா? ஒரு மாதமா? அரை வருஷமா? இரண்டு ஸம்வத்ஸரங்கள் ஆகின்றனவே! அவருடைய முகமே மறந்துபோயிற்று. உலர்ந்த மரம்போல் நிற்கிறேன். என் நாதர், ஆத்மப்பிரியர், பிராணரமணர், ஹிருதய மூர்த்தி, பரிசுத்த புருஷர் என்னை மறந்துவிட்டாரே! பாபியான நான் அவரை மறுபடி காண்பேனா? அவரிடம் ஸம்பாஷிக்கும் பாக்யம் பெற்றிருக்கிறேனோ இல்லையோ! பிராணபதி புத்திஸாகரர், பூபாலகர், புகழ்பெற்றவர், கருணாமூர்த்தி, கடவுளுக்குச் சமானமாய் எனக்குத் தரிசனம் கொடுப்பவர் மறைந்திருக்கிறாரே! இந்தத் துக்கத்தை நான் எங்ஙனம் ஸகிப்பேன், ஹா! ஹா! [கண்ணீர் விட்டு அழுகிறாள்]

ந.—பவித்திரமணியே! கண்ணீர் விடாதீர் (ராணியின் கண்ணைத் தன் புடவைத் தலப்பால் துடைக்கிறாள்.)

தங்களைப்போல் துக்கப்படுவோர்கள் உலகத்தில் அதிகமில்லை. விக்கிரமாதித்யருடைய தேவி ஸந்தோஷமாயிருக்கவில்லையா? மற்ற ராணிகளும் மனோல்லாஸமாய்க் காலம் கழிப்பதைத் தாங்கள் பார்த்து வருகிறீர்கள். சீக்கிரம் வருவார் ஸ்ரீமந்தப் பிரபு. விடும் துயரத்தை.

பா.—பெண்ணே! ஒருவரைப்போல் மற்றொருவர் இருப்பது ஸாத்யமா? அந்தர் பஹிர்முகங்களில் அன்புள்ளவர்கள் உலகத்தில் அதிகமிரார். மானவ தர்மத்தில் மகத்வப் பொருளென்று கருதிவிட்டால் மகாதேவனாலும் அந்தவஸ்துவை அகற்றமுடியாது. என்னுடைய சிறு வயதில் ஒரு யோகீச்வரர் என் தந்தையைப் பார்க்க வந்தார். என்னுடைய மாதாபிதாக்கள் அவரை ஷோடசோபசாரங்களால் உபசரித்து





பூஜித்தார்கள். சில காலம் எங்கள் அரண்மனைத் தோட்டத்தில் தங்கினார். நான் பாலிகையானதால் அவருடைய ஆசிரமத்துக்கு அடிக்கடி செல்வேன். புஷ்பம், தர்ப்பை, இலை, பழம் முதலியவைகளை அவருக்குக் கொடுப்பேன். என்மேல் இரக்கங்கொண்டு பற்பல நீதிகளை உபதேசிப்பார். ஜீவாத்மா, பரமாத்மா, பேதங்களை விவரிக்கையில் ஸ்திரீ புருஷ உதாரணங்களைக் கூறி விளக்கினார். அன்றுமுதல் என்னுடைய பரமாத்மாவிடம் என்னை ஐக்யப்படுத்த வெண்ணினேன் விவாகமானதுமுதல் ஞானாத்மாவாகிய பதியையின்றி வேறு கெதியில்லை என்று மனதில் ஸங்கல்பம் செய்துகொண்டேன். என்னுடைய ஸங்கல்பப்படி கணவரைக் காணாததால் நான் வருந்தித் தவிக்கிறேன். அவரைப் பாராமல் எந்த லௌகிக விளையாட்டு வியாபாரங்களிலும் ஸம்பந்தப்படுவதற்கு என் மனம் துணியுமா? அவரே என்னுடைய ஆத்மாக்ஷகர். தர்ம ஸ்வரூபகர். ஞான குருவும் அவரேயாவர். என் மனமெல்லாம் அவருடைய உருவத்தில் ஸஞ்சரித்துத் தவிக்கிறது. நான் ஜீவனவமாயிருக்கிறேன்.

ந.—(தனக்குள்) ராணியின் மனதிடம் யாருக்கு வரும். அற்பப் பாக்கியான நானோ அவருக்குப் புத்திபுகட்டுபவள். இனிபேசுவதில் பயனில்லை, ஏதாவதொரு காரணத்தைக்கொண்டு இவ்விடத்திலிருந்து அந்தப்புரம் அழைத்துச் செல்ல வேண்டும். [வெளிப்படையாய்] அம்மணி! ஸந்தியாகாலமாயிற்று. தாங்கள் நித்யம் பூஜைசெய்யும் நிர்மலா தேவியைத் தொழவேண்டாமா? எழுந்திருங்கள். பக்தியுடன் சக்தியை ஆராதித்தால் ஸித்தி கிட்டும். [தன் கைகளால் பானுமதியின் கரங்களைப் பிடித்துக்கொள்ளுகிறாள்]

பா.—[பெருமூச்சுடன்] ஹே ஸர்வஞ்ஞா! உமது கட்டளைப்படி தர்ம ஸேவையென்னும் விரதத்தில் சிரத்தைகொண்டு கர்மக்ஷேத்திரத்தில் வசிக்கிறேன். தயாமயா! விரதத்தை ஸம்பூர்த்தி செய்யும். சித்த சாஞ்சல்யத்தை அகற்றும். நான் அல்ப ஜீவி. என்னுடைய அந்தக்கரணம் துஷ்டத்தனம் பெற்றுள்ளது. ஹே தேவா! உமது விமலஞானாக்னியினால் என்னிடமுள்ள துர்க்குணங்களைத் தகியும். ஸர்வதர்சகராயும் அந்தர்யாமியாயுமுள்ள நீர் உமது குழந்தையின் குற்றத்தை க்ஷமியும். ஸர்வவியாபியே! மானிடஜாதியின் மனதைச் சோதிக்க பற்பல வழிகளைக்

கற்பித்திருக்கிறீர். இது உமது திருவிளையாடலல்லவா? அவரவர்களின் கர்மமே அஞ்ஞானத்துக்குக் காரணமென்று கற்பித்திருக்கிறீர். ஸுக துக்க போக ஸாதனமான ஜென்மத்தை விரும்பும் வரையில் அஞ்ஞானம் நிவர்த்தியாகாதென்று நிரூபித்து விட்டீர். தத்வாதீதா! மர்மத்தால் மானவர்களை ஏமாற்றுவது தர்மமா! உமக்குத் தகுமா? அபலையை அலையவிடுவது உசிதமா! எங்கே பார்த்தாலும் உம்முடைய திருவிளையாடல் விளங்குகிறது. பற்பல தேசங்களில் புகுந்து நானாவித ஆட்டங்களை ஆடி வருகிறீர்! அஞ்ஞான ராக்ஷஸி ஜீவராசிகளை விழுங்கி வருகிறாள். ஸ்வதர்மம் மறைகிறது. கனவைக் கண்டு களிப்பவர்போல் உலகைப் பார்த்து உத்ஸாகப்படுகிறார்கள் மானவர்கள். ஞானமயனே! என் மனதில் உள்ள குறை ஒன்றே. நான் ஸத்கதியடைய என் நாதர் ஸர்வோத்மருடைய ஸங்கமே பிரதான மென்று எண்ணி இரவு பகலாய்த் தவிக்கிறேன். தேவாதிதேவா! இந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்யாமல் என்னை ஆர்த்த நாதம் புரிய விடுவது தர்மமா? நான் தவித்துக்கொண்டிருக்கையிலேயே இரண்டு வருஷங்கள் சென்றன. ஸம்ஸார சக்ரம் சுழன்று வருகிறது. யாருடைய சங்கத்தால் ஸிருஷ்டி ஸ்திதிகளைப் பார்ப்பதில் ஸந்துஷ்டி யடைந்திருந்தேனோ அவருடைய பிரிவால் அவைகளை ஸ்மரிக்கவும் மனமிசையாமலிருக்கிறேன். என் யோசனைக்கு முடிவுண்டா இல்லையா? நாள்வருவதும் தினம் கழிவதும் உம்முடைய விளையாட்டுப் பந்தென் றெண்ணவேண்டும். பரமனே! பாரும் என்னை உம்முடைய பெண்ணின் குறையைத் தீரும். நிர்மலானந்தமூர்த்தி! நிர்த்தயவாயிராதீர் [கைகூப்புகிறாள்]

ந.—அம்மணீ! இருள் மூடிக்கொண்டது. அரண்மனை சென்றால் ஆதிநாதனை வணங்க ஸௌகர்யமாயிருக்கும். எழுந்திரும்.

பா.—பிரியஸகி! உன் மனப்படியே வருகிறேன். இந்த ஜீவன் எங்கிருந்தாலென்ன? வா போகலாம், இரவில் நான் எழுதிய புஸ்தகத்தைப் படி கேட்கிறேன். [எழுந்திருக்கிறாள்]





ந.—[வழி காட்டிக்கொண்டே] அம்மணீ! ஆநந்தவதியான தங்களுக்கு நான் ஊழியம் செய்ய ஏற்பட்டேனே! அது என்னுடைய பாக்கியோதயமேயாகும். அகாதமாயும், அபூர்வமாயுமுள்ள ஆத்மபோத விஷயங்களை வெளியிடுகிறீர்கள். அவைகளைக் கேட்க என் மனம் ஆவல்கொள்கிறது. [இருவரும் போகின்றனர்]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாம் காட்சி

இடம்.—இந்துமதியின் அந்தப்புரம். காலம்.—இரவு

நாத்தகிகள் கூத்தாட, வாத்தியக்காரிகள் வாசிக்க ஸங்கீத ஸ்திரீகள் கானம் செய்ய இவைகளை ஆனந்தத்துடன் பார்த்தும், கேட்டும், தலையசைத்தும் கொண்டிருக்கிறாள் இந்துமதி.

இ.—ஆகா! இன்று நான் செய்த பாக்கியம் யாதோ அறியேன். என் அந்தப்புரத்திலுள்ள கானஸுந்தரிகள் சதுரிகைகளேயாவர். ஓர் புறம் திரும்பி யார் அங்கே! ஸகி! இப்படி வா!

[ஓர் ஸகி வருகிறாள்.]

ஸ.—அம்மணீ! இதோ வந்தேன். என்ன உத்தரவு.

இ.—ஸகி! இந்த ஸங்கீத ஸம்பிரம ஸந்தோஷத்தை நான் ஒருவளாய் அனுபவிப்பதில் எனக்கிஷ்டமில்லை. ராஜஸ்திரீகளை நான் அழைப்பதாய்க் கூறி உன்னோடு கூட்டிக்கொண்டு வா. பானுமதியை மறவாதே. அவளை எவ்விதமாயாவது என் அந்தப்புரம் அழைத்துவரக் கடவாய்.

ஸ.—அம்மணீ! அங்கனமேயாகட்டும்.

[போகிறாள்]

இ.—கானகாமினிகளே! கேதாரராகத்தில் பாடி யாடுங்கள்.

எல்லோரும்.—ராஜேச்வரீ! அவ்விதமே செய்கிறோம்.

[பாடுகின்றனர்]

இ.—[ஆநந்த பாஷ்பம் சொரிய] ஆகா! என்ன இனிமை, எத்தகைய ஞானம், என் பாக்யமே பாக்யம்.

[சில ஸ்திரீகளோடு ஸகி வருகிறாள்.]

ஸ்திரீகள்.—வந்தனம். மகாராணிக்கு மங்களமுண்டாகட்டும்.

இ.—வாருங்கள். என் ஸகோதரிகளுக்குச் ஸந்தோஷ மேற்படட்டும். [ஸகியைப் பார்த்து] பானுமதியம்மாள் எங்கே! என்ன சொன்னாள்.

ஸ.—தாயே! அந்தம்மாள் கட்டிலில் படுத்துக் கண்ணீர் ஸ்நானம் செய்து கடவுளைக் கூவுகிறாள். சந்திரிகையாகிய தோழி சிந்தையுடன் மனம் நொந்து சாந்த வசனங்களைக் கூறுகிறாள். ராஜமகிஷியோ தமது நிலைமை மறந்து சோர்வுடனிருக்கிறாள்.

இ.—ஆகா! இதுவும் ஒரு விந்தையே (ராஜஸ்திரீகளை நோக்கி) ஸகோதரிகளே! நமக்கு மனோபாசமில்லையா! நம்முடைய புருஷர்கள் நம்மைப் பிரிந்து காடுகாடாய் நடமாடி வருகின்றதை நாமறியோமா! இஃதென்ன அதிசயம்! புருஷனைப் பிரிந்திராத பெண்ணும் பூமியிலுண்டா! இவள் பக்கத்தில் உட்கார்ந்து பந்து பாச்சாக்காய்களை ஆடவில்லையாம். பர்த்ருஹரி அவர் ராஜகாரியங்களைப்பார்க்கக் கூடாதென்று இவளுடைய இஷ்டப்போலும். அவர் இந்த விந்தைத் வார்த்தைக்கு உட்படுவாரோ! வெகு அழகுதான். நமது காலத்தை நம் விஷயத்தில் போக்கிப் பதிவரும் தினத்தை எதிர்பார்க்கலாமென்று நான் பற்பல விநோத விளையாட்டுகளைக் கற்பித்திருக்கிறேன். நீங்கள் ஒவ்வொரு நாளும் என் அந்தப்புரம் வருகிறீர்களோ! இதில் உங்களுக்கு வந்த தாழ்வென்ன?

முதல் ஸ்திரீ.—மகாராணி! உலகத்தில் இதுவரையில் வாழ்ந்த ராஜஸ்திரீகளெல்லாம் பிராண நேசனைப்பிரியாமல் மடியில் முடிபோட்டு வைத்துக்கொண்டிருந்தார்களென்று நாமெங்கும் கேட்டதில்லை. இது ஒரு புதுமைதான்.





இரண்டாவது பெண்.—அம்மணி! பானுமதியின் மனம் மிகவும் கலவரமுற்றிருக்கிறது. அவளுக்கு யாரும் எதிரில்லை. எதிரில் நின்று முகம் கண்டெடுத்துப் பாராள். இரண்டு வருஷமாயிற்றாம் புருஷனைப் பிரிந்து. இனி யாரை வைத்துக்கொள்ளலாமோ என்று ஏங்கித் தவிக்கிறாள். இது எப்படியும் உண்மையோ! அறிபேன்.

மூன்றாவது மாது.—மாதாவே! நானென்ன சொல்வேன். பிதற்றால் சித்தம் வியத்யாஸப்பட்டதென்று நினைத்தேன். ஆனால் அது பொய். பாசாங்குக்காரியென்றே ஸ்திரப்படுத்தி விட்டேன். ஓர் நாளில் ஒருபொழுது ஆகாரம் குறைவுமாயின் நம்மால் ஸகிக்க முடிகிறதில்லையே! ஒவ்வொரு நாளும் பட்டினி உபவாசம் என்ற சொற்கள் அவள் தோழியின் வாயால் வந்துகொண்டிருக்கின்றன. இது வைத்யமா? நாங்களே போதிக்கவேண்டும்.

இ.—[பெருமூச்சுடன்] உம். இந்த வேஷம் போட்டதாலல்லவோ பானுமதியைப்பற்றி இவ்வளவுதூரம் பேச நேர்ந்தது. நான் மகாராஜாவின் அன்புக்கிசைந்த மனைவியாயிருந்தும், ஆசார அநுஷ்டானங்களில் பெயர் பெற்றிருந்தும், தெய்வ பூஜைகளைச் செய்தும் என்னை யொருவரும் புகழ்கிறார்களோ? ஸாமான்யரும், அரசருடைய அன்பைப் பெற்றதால் சற்றுப் பெருமை வாய்ந்தவளும், புத்திபுள்ளவளுமான மாதை பர்த்ருஹரிக்கு வந்த யோகத்தைப் பார். அவளிருக்கட்டும். அவளை மணந்த பானுமதியின் அதிருஷ்டத்தை என் சொல்வேன். அவளில்லாவிடில் உலகமில்லை என்று இந்த அரண்மனை முழுவதும் சொல்லுகிறார்கள். என் மாமியும் அவளை ஸ்துதிக்கிறாள். அதிகமென்ன? என் பிராணநாதரே புகழ்ந்திருக்கிறார். அவளிடத்தில் என்ன மகிமையுண்டோ யார் அறிவார்கள். எல்லாம் அதிசயமாகவே இருக்கிறது.

நான்காவது வனிதை.—மகாராணி! நாங்களும் அவளைப் பெருமையாய்க் கூறுகிறார்களென்று நினைக்கிறேன். அவளுடைய பொய்

வேஷத்தை வெளியிட்டுப் பலர் கொண்ட அபிப்பிராயத்தை மாற்றிப் பரிஹஸிக்கச் செய்ய வைப்பதல்லவோ தங்களுடைய காரியமாகும். அப்புறம் அவளுடைய கௌரவம் தெரியும்.

இ.—ஆம்! நீ சொல்வதும் உண்மையே! இந்த வேஷத்தை நாம் அறிந்துகொள்ளாவிடில் இருந்தென்ன? இறந்தென்ன? நம்மைப்போல் ஸ்திரீஜாதியா யிருக்கிறாள். காயமனோவாக்குகளால் தர்மத்தையே தியானம் செய்வதெங்ஙனம்? இதற்கொரு உபாயம் சொல். அதன்படி செய்து அவள் உண்மையை அறிந்துகொள்வோம்.

ஐந்தாவது அங்கனை.—ராஜதேவி! பானுமதி செய்வதெல்லாம் ஜாலவேஷமே! அதை நான் ஒரு நிமிஷத்தில் வெளியாக்குவேன். அலைச்சை, மோசம் முதலிய துர்க்குணங்கள் அவளைச் சூழ்ந்திருக்கின்றன. யாரையாவது கண்டால் "ஹேதேவா! என் அவித்துணைவனில்லாது நான் அவனியிலிருக்கத் தகுமோ!" என்றுசொல்லி பெருமூச்சு விடுகிறாள். பதிதர்மத்தைப் பரிபாலிக்க வந்த பாமினியாம் அவள்? இந்த அகம்பாவத்தை அடியோடு அகற்றவேண்டும்.

இ.—என் ஸகோதரிகளே! சங்கீதத்தில் எனக்குச் சலிப்புண்டாயிற்று. பானுமதியின் ஸாகஸ காரியங்களைப் பரிசோதித்தறிய வேண்டுவது அவசியமாகும். நீங்களெல்லாம் ஸகாயம் செய்தால் முடியாததுமுண்டோ!

எல்லோரும்.—அம்மணீ! தங்களிஷ்டம்போல் நடக்கிறோம்.

இ.-ஸந்தோஷம். வெகுநேரமாயிற்று. சயனமந்திரம் செல்வோம்.

எல்லோரும்.—அப்படியே [அனைவரும் போகின்றனர்]

காக்ஷி முடிகின்றது.

THE GUARDIAN PRESS MADRAS



பணத்தைப் பார்க்கப்பார்க்க அதைச் சேர்ப்பதிலேயே மனிதர்கள் ஆயுளைச் செலவிடுகிறார்கள். தர்மபுத்தி ஒளிந்தது. தரித்திரர்களின் கெதியை அனுபவிக்கும் காலம் கிட்டிற்றென்றெண்ணாமல் பாபராசியில் பிரியங்கொண்டு பாதகாக்கிறார்கள். தங்களுக்கும் பிரயோஜனப்படாமல் அன்யர்களுக்கும் உபயோக மில்லாமல் பணத்தை வைத்திருப்பதில் வரும் பலனென்ன என்பதை ஏன் யோசியாமலிருக்கிறார்களோ அறிய முடியவில்லை.

உலகத்தில் தானம் செய்யுமாறு பற்பல உதாரணங்களிருக்கின்றன. மேகம் ஜலத்தையும், விருக்ஷம் பழத்தையும், பசு பாலையும், தென்னை அமிருதத்தையும் பரோபகாரார்த்தமாய் தானம் செய்கின்றன. ஈசுவரனுடைய கட்டளையை நினைத்தாவது தர்மம் செய்யத் துணிவார்களாக.

பரமன் வஸ்துக்களுக்குக் கொடுத்துள்ள சக்திகளை அவைகள் இடைவிடாமல் பரோபகாரத்தின் பொருட்டு வழங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகள் உலகத்தாருக்கு நன்மை செய்யாவிடில் பரமே[illegible]வான் அவைகளை நாசப் படுத்துகிறானென்பது நிச்சயம். [illegible] தாக வேண்டுமானால் உதாரமாய் வழங்குவதே [illegible] இதை அறியாதம் மூடர்கள் முகத்தை யாட்டுவார்கள். [illegible] ராஜ்யம் ஈசுவரனுக்குச் சொந்தமானது. அவர் கொடுத்த கட்டளையை மானவ கோடிகள் வணக்கத்துடன் நிறைவேற்றினாலன்றி நற்கதி கிடைப்பதில்லை. பகவான் ஜனங்களின் நன்மையைக்கோரி "ஸூர்ய, சந்திர, மேக, நக, நதி, விருக்ஷ, கோ" முதலிய வஸ்துக்களை ஸிருஷ்டித்திருக்கிறார். பெற்றோர் மக்கள் மனைவிகளைக் காப்பாற்றுவது முக்ய தர்மமாயிருந்தாலும் இயன்றவரையில் உபகாரம் செய்து வரவேண்டும்.

பூர்வீகர்கள் சொல்லியிருப்பதைச் சற்று யோசித்துப் பார்த்தால் அனேக உத்தம விஷயங்கள் வெளியாகும். தனமும், ஜீவனமும் நிலைத்திரா. தானதர்ம புண்யகர்மாதிகள் மனிதனைப் புனிதமாக்கும். பொருள் மேலுள்ள ஆசையை வெறுத்துப் புண்யகாரியங்களைச் செய்வதில் இச்சைகொண்டு ஞானத்திரவியத்தை ஸம்பாதிக்க ஒவ்வொருவரும் முற்படவேண்டும்.

ஞானமுண்டாகவேண்டியே ஸத்கர்மங்களைச் செய்வது! புண்யாத்

மாக்களுக்கு இயற்கையிலேயே அறிவு உதயமாகும். தெ லாதவர்களை நல்வழிக்குக் கொண்டுவர வேண்டிய பற்பல களைச் செய்யும்படி பெரியவர்கள் விதியேற்படுத்தி யி நித்யவிதிகளை முதலில் கற்பித்து அவைகளில் சிரத்தை ட டானங்களேற்பட்ட பிறகு தெய்வத்தைத் துதிக்கவு வேண்டவும், பாபத்தை மறுத்து புண்யத்தை நாடி பற்பல வாஸாதிகளைச் செய்து பத்திமான்களென்ற பெயருடன் வின் தை யறியுமாறு உத்தரவிட்டிருக்கிறார்கள். அறிவுள்ளவர் களின் ஆக்ஞைகளை அசட்டை செய்யார்கள்.

## தத்வ விளக்கம்

உலக பாசம் கலகத்தையே விளைக்கும். மாயாவஸ்த தன் கலங்குகிறான். மாயரோகத்துக்கு மருந்துண்டா ? உ அதை உண்பவர் யார்? கோடிக்கொருவர் அந்த ஔஷ கொள்ளுவார்கள். மருந்தின் மகிமை அருந்தினாலன்றி பகவந்நாம ரஸமே திவ்யௌஷதமாகும்.

ஜனனீ ஜனகர்களை விட்டுப் பிரிவதென்றால் சிறு தொடங்குவார்கள். ஹிதவசனம் கூறினாலும் அவர்களி படுகிறதில்லை. சிறுவர்களே வளர்ந்து பெரியவர்களாவார் காலத்தில் மாதாபிதாக்களின் பிரிவைக்கோரி மந்திரம் ெ மனதின் தன்மை மாறிக்கொண்டே யிருக்குமென்பதற் திருஷ்டாந்தமாகும்.

சக்திக்கேற்ற பக்தி என்று சிலர் சொல்வதுண்டு. வி தகைய கஷ்டத்தையும் ஸஹித்துக்கொள்வார்கள். உத்தம கற்றறிந்து மகிழ்வதும், மஹேசனை மனதாறத் துதித்து புத்திமான்களின் லக்ஷணமாகும். மதிஹீனர்கள் தாங்க கும் ஆசாரம், பூஜை, தான தர்மாதிகளைப்பற்றிப் பிறரி பேசிக்கொள்வார்கள். உபகாரம் செய்தவர்கள் தங்கள் கார் ரிடம் கூறி மெச்சிக் கொள்வார்களாகில் பலனை இழப் ஸனை, பூஜை, தியானம் முதலியவைகளைச் செய்வோர்கள் செய்துகொள்வது தவறாகும்.

உபநிஷத்துக்களைப்போல் உபயோகமுள்ளவை உ





அவைகளே உத்தமப் பொருள்கள். அத்யாத்ம விசாரம் அவைகளால் விளங்கும். ஆரம்பபாகத்தில் லௌகப்ரீதத்தையும், அந்தியத்தில் மோக்ஷத்தையும் தருகின்றன. விவேகிகள் வெகு விச்வாஸத்துடன் அவைகளை ஆதரிப்பார்கள். ஹிந்துமதம் ஸகல்யமும், பெருமையும், பிரயோஜனமும் உள்ளதாகும். இதிலுள்ள தர்மதத்துவம் எங்கு மிராது. எல்லா மதத்தையும் தனக்குள்ளடக்கி எந்தச் சங்கையையும் க்ஷணத்தில் போக்கி மனிதனைத் தெளிவடையச் செய்கிறது. வியஸன காலத்தில் வேதாந்தம் தோன்றி தேறுதல் கொடுக்கும். ஆர்ய தர்மத்தில் நீதிமார்க்கமும், பாரமார்த்திக போதனைகளும் ஏராளமாயுள.

மதபேதவாதத்தால் மண்டை யுடையுண்டவர்கள் அனேகர். ஆரிய தர்மத்தில் சாந்தத்தோடு தத்வவிசாரம் செய்யும் மார்க்கமுண்டு. ஹிந்துமதத்தைப் பால்யபுத்தியால் நிந்திப்பவர்களெல்லாம் மனச் சாந்த மேற்பட்டவுடன் வந்திப்பது வழக்கம். வேதாந்த சாஸ்திரம் ஸர்வ ஸாதனங்களையும் தரும்.

குரூபியாயிருந்தாலும் ஸத்குண மிருந்தால் சோபிப்பான். அழ கிருந்தும் அறிவில்லாவிடில் அதிக விகாரமடைகிறான். இது அனுபவத் தில் கண்ட விஷயம். அஞ்ஞானத்தால் ஸம்சயமும், ஸந்தேகத்தால் இல்லாமையும் ஏற்படும். அபேதஞ்ஞானமுண்டானால் மானவன் நிர்த் தோஷியாகிறான்.

எல்லா தத்வங்களுக்கும் மன உறுதியே காரணம். ஆதியந்தங் களுக்குட்பட்ட மனிதக்கூட்டத்தின் க்ஷேமார்த்தமாய் ஸகல சாஸ் திரங்களும், தத்வங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை அறிய விரும்புவோனே ஆநந்த புருஷன். அவனே தன்யன். உபகாரி. தர்ம ஸ்வரூபி. பகவத் பிரியன். மோக்ஷபாத்யன். மகத்வமுள்ளவன்.

ஸர். வ். ஜோன்ஸ் என்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார்.

“ பிளேட்டோபித கொரால் என்பவர்கள் எழுதியுள்ள தத்வசாஸ் திர கிரந்தங்களைப் படித்தால் ஆரியர்களின் வேதங்களுடைய ஆதா ரத்தை அனுஸரித்திருக்கிறதென்று விளங்கும். அத்யாத்ம சாஸ்திரத் தின் ஸாகல்ய வசனத்தால் மேற்கண்டவைகளை நிர்ணயிக்கலாம்.”

உண்மையை யறியாதவர்கள் குருடர்களும் அஞ்ஞானிகளும் ஆவார். வேதாந்த நதி ஓடுகிறதை யறிந்தும் அதை பருக விரும்பாத

வர்கள் அனேகருளர். அஞ்ஞான தேவியின் வச்ய மருந்தின் வேகம் குறைந்தாலன்றோ விவேகோதயமாகும்.

ஸத்யத்தைப் பேசும்பொழுது நெஞ்சடைப்பும் பொய்புகலுகையில் பரமாநந்தமும் உண்டாகின்றன. கண்ணுக்குத் தோற்றும் பொருள்கள் மெய்யென்றும், பிரத்தியக்ஷமல்லாத வஸ்துக்கள் இல்லையென்றும், வாதிப்பவர்களுக்கு ஸ்வாமித்வத்தின் ஸ்வரூபம் விளங்குவது அரிதாகும்.

ஆத்மாவின் அதிசய சக்தியை அறிந்தவர்களுக்கல்லவோ ஆநந்தமுண்டாகும். செடி மரங்களிடம் நித்திராவஸ்தையுடனும், மிருகம், பக்ஷி, புழு முதலியவைகளிடம் ஸ்வப்நாவஸ்தையிலும், மனிதர்களிடம் ஜாக்ரதாவஸ்தையிலும் ஆத்மா வியவஹரிக்கிறது.

கஷ்ட காலத்தில் கடவுளைக் குற்றம் சாட்டிக் கூறுவதும், ஸுக வாஸத்தில் ஸ்வயம் பிரதாபத்தைக் குறித்துப் பேசுவதும் மானிடருடைய வழக்கம். சக்தி யிருக்கும் ஸமயத்தில் லோபமும், சக்தியற்ற காலத்தில் தர்மமும் செய்ய விரும்புவோர்களின் மதியைப்போல் ஸுகதுக்கங்களில் பேசும் வார்த்தைகளாகும். தெய்வத்தை இகழ்ந்தால் தீவினை அதிகரிக்குமேயன்றிக் குறைவது துர்லபம்.

உண்மையான அறிவுக்கு ஸந்தோஷமே முக்ய லக்ஷணம். மகத்பதி கொடுத்துள்ள முகப்படத்தை மூர்க்கர்கள் மனம் வந்தபடி அசைத்து வைத்துக்கொள்வார்கள். இவ்வித ஸம்பவத்தால் அவலக்ஷணம் அதிகரிக்குமேயன்றி ஆநந்த மேற்படாது.

நித்ய ஸுகத்தைப்பெற வெண்ணினால் சித்தசுத்தி அவசியம். வீட்டில் குப்பையைச் சேர்த்து வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களுக்கு அவலக்ஷணமாய்க் காணும். மனமந்திரத்தில் மலின விஷயங்களை எண்ணினால் மகத் ஸந்தோஷம் எங்கிருந்து தோன்றும்?

விவேகம் எல்லாக் குணங்களுக்கும் அதிபதி. அதன் பிரபாவத்தால் மனிதனுடைய கீர்த்தி ஸாமர்த்தியாதிகள் பிரகாசிக்கின்றன. பாரமார்த்திக விஷயங்களை விசாரசக்தியால் விளக்கும் விவேகத்தை மனிதன் எவ்விதத்திலும் பெறக்கடவான்.

ஆசையின் நாசத்தைக் கோரும் மனிதனே ஈசனுடைய நேசத்துக்குரியவனாவான். ஆசை அதிகரித்தால் நாசமும் வேறொன்றி விருக்ஷ





மாய் வளரும். அளவுக்கு மிஞ்சின ஆசையால் மோசம் போனவர்கள் அனேகர். மகாத்மாக்களின் மனதை அறிந்தவர்களே தன்யர்கள்.

சாபல்யமடங்கினாலன்றித் தபஸ்ஸித்தி கிட்டாது. நெஞ்சால் ஈசனை நினைந்துருகும் விவேகிகள் சபலசித்தத்தை நிர்மூலமாக்குவார்கள். மோக்ஷப்ராப்திக்குச் சுத்த அந்தக்கரணமே ஸரியான மார்க்கமாகும். மனக்கல்மஷமுள்ளவர்களுக்கு நிரதிசயாநந்தம் விளங்காது.

பிராணிகளிடம் அன்பும், பரோபகாரத்தில் அபிமானமும், புண்யத்தில் பிரியமும் உள்ளவனே தர்மரக்ஷகன். உண்மையாய் உழைப்பவனுக்கு எந்தக் காரியமும் கைவசமாகும். விவேகியின் சாதுர்யம் தெய்வத்தினிடமிருந்து கிடைக்கும் வரத்தை யொக்கும். அவிவேகியின் ஸாமர்த்தியமோ குழந்தையின் கையிலுள்ள கூர்மையான ஆயுதத்தைப் போன்றது.

தயை சாந்தமுள்ளவனுக்குப் பாபமேது. பாபகிருத்யம் செய்தவனுக்கன்றோ மனம் வருந்தும். கல்மஷமற்ற நெஞ்சும், உதாரபுத்தியும் உண்மையறிவுமுள்ளவனே புண்ய புருஷனாகிறான். ஸ்வயநன்மையைக் கோராதவன் ஸுகியாவான். தோஷாரோபணம் செய்யும் மூடர்களின் மத்தியில் மௌனமாயிருப்பவனே விவேகி எனப்படுவான்.

ஆசை விவேகத்தோடு கூடினால் ஸுகமாயிருக்கும். அவிவேகத்தை யனுஸரித்தால் அனர்த்த முண்டாகும். நாம் செய்யும் ஸத்காரியத்தைத் தற்காலத்துக்கென்று கருதாமல் சாச்வதமாய் நடத்துவதற்கென்று கருதினால் ஈச்வரபக்தியும் ஞானமும் ஏற்படும். புண்யக்கொடி தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும்.

விசாரமில்லாத சில மூடர்கள் பகவானை வச்யம் செய்து கொண்டதாக உளறுவார்கள். தெய்வம் தங்கள்கிருகத்தில் தவழ்ந்து விளையாடுவதாய்த் தெரிவிப்பார்கள். ஞானநாயகனை பரமன் யோகிகளிடமும், பக்திமான்களின் ஸேவையிலும் திருப்திகொண்டு அற்புத விஷயங்களை விளக்குவார். மூடர்களை ஸாமான்யகருணையுடன் பரிபாலிப்பாரேயன்றி அவர்களுக்குப் பிரத்யக்ஷமாகார். மனதில் மகா நதிகளும், அகாத பர்வதங்களும், பல சுரங்கங்களும், அநேக கோட்டைகளும் அடங்கியுள. யோசனையுண்டாகும் காலத்தில் அதிலுள்ள வஸ்துக்கள் கட்ட

டங்களாய்த் தோன்றி பகிரங்கத்தில் தாவிருக்கும். ஞான ரத்நத்தைப் பெற விரும்புவோர்கள் அற்பத்தில் ஆசை கொள்ளார்கள்.

பயம், கோபம், அஸூயை முதலிய துர்க்குணங்கள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. இவைகளை உண்டாக்கவும், அழிக்கவும் மனமே வல்லது. மனம் குரூரமானால் ஸிம்ஹநகத்தைப்போலப் பயங்கரமாகவும், சாந்தமானால் பரமாநந்தத்தைத் தந்தும் வருகிறது. இதை யநுஸரித்தே ஸத்ஸங்கம், ஸத்விஷயாதிகளை மனதில் புகுத்துவது.

யாசகம் கொடுப்பதால் பரோக்ஷம் கிட்டாது. மனத்தெளிவுக்காக தான தர்மாதிகள் செய்யப்படுகின்றன. கீர்த்தி, புகழ்ச்சிகள் உலகத்தில் அடைய விரும்புவோர்க்கு உண்மைஞ் ஞானம் வராது. எதை நாடி உழைக்கிறானோ அதன் பலனே கிட்டும். வீணாய் ஆசைப்படுவதெல்லாம் பலிக்காது. சரீரத்துக்கு ஆகாரம் அவசியம். புத்திக்கு வித்யை தேவை. உடலுக்குடன் புத்தியைப் போஷித்து வருவோர்களுக்கு இகபரங்களிரண்டிலும் ஸுகமுண்டு. சரீரத்தை வளர்ப்பதில் மட்டும் மனமுள்ளவன் ஸுகியாகான். அவனைத் துக்கம் சூழ்ந்துகொண்டிருக்கும். ஸௌந்தர்யமும் பதிவிரதா தர்மமும் ஒன்று சேர்ந்த ஸ்திரீ புகழ் பெறுவதுபோல் தேகாரோக்யமும் புத்தித் தெளிவும் பெற்றுள்ளவன் ஸுகமடைவான்.

பரமார்த்தத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால் எந்தச் சாஸ்திரத்தைப் படிக்கலாம். ப்ரபஞ்சாநுபவமே சாஸ்திரமாகும். அதைக் குறித்து விசாரணை செய்வதே வியாக்யானமெனப்படும். அமைதியே அறிவாளிகளுக்கு லக்ஷணமும் ஆநந்தமும் ஆகும்.

ஸாதுக்கள் கோபங்கொண்டாலும் மனோவிகாரமடையார். ஸமுத்திர ஜலத்தை வைக்கோலைக் கொளுத்திக் காய்ச்ச முடியுமா? சுத்த மனதில் ஈச்வரத்வத்தை எண்ணி எண்ணி உண்மையறிந்து வருவோர்களுக்கு உலகத்தாரால் ஆகும் உபகாரமென்ன?

தர்மோபதேசகனுக்குத் தேசாசாரங்களால் ஆகவேண்டியதென்ன? நிந்தை, புகழ்களால் கிடைக்கும் ஸுகமென்ன? தர்மமே அவனுடைய மனதில் நிலைத்திருக்கையில் மற்றவை அவனுக்கு அவசியமில்லை. எங்கிருந்தாலும் தர்மபரிபாலனம் செய்து அதைப் பலர் அறியு





மாறு போதித்துத் திருப்திசெய்துகொள்வதே அவனுடைய முக்ய கடமையாகும்.

நோயின் தன்மையை அறியாதவரையில் ரோகிகளேயாவார். அதன் மூலத்தைத் தெரிந்துகொண்டால் ஸுகப்படலாம். வைத்தியன் பத்யத்தைக்கூறி மருந்து கொடுப்பான். சாவை சட்டை செய்யாத நிகிலரோக நிவாரண ஔஷதம் எது? தத்வஞானமேயாகும். இதை ஒவ்வொருவரும் தவறாமல் ஸேவித்து வருவார்களாகில் ஆநந்த ஜீவிகளாயிருப்பார்களென்பதில் ஐயமில்லை.

சரீரபலத்தைவிட தைர்யபலம் மேலானது. ஸத்யத்தின் வல்லமையால் ஸகல காரியங்களையும் ஸாதிக்கலாம். தைர்யசாலியிடம் உண்மையிருக்குமாயின் அவன் எந்தக் காரியத்தையும் செய்வான். ஸத்யத்தின் மகிமைக்கு ஸமதையானது ஒன்றுண்டோ!

யோகிகளுக்கு அப்யாஸபலத்தால் மனம் ஸ்வாதீனமடைகிறது. சித்தம் அடங்கினால் வாயு அவர்களின் ஆதீனத்திலிருக்கும். பிராண வாயு மூக்கின் இரண்டு வழிகளில் ஒன்றில் ஸஞ்சரித்துப் பிறகு மற்றொன்றில் புகுந்து செல்லும். வாயு ஜயத்தைப்பெற்ற இவர்களுக்குப் பிரபஞ்சம் ஸ்வாதீனத்திலேயே இருக்கும்.

ஏகாந்தத்தில் ஆத்மாவுடன் ஸம்வாஸம் செய்து அனேக விஷயங்களை அறிந்துகொள்ளலாம். நித்திய சுகத்தை மற்ற விதங்களால் பெறுவது அஸாத்யம். தனிமையே தன்னையறிவதற்கு ஸாதகமானது. அதை விரும்புவோனுக்கு அந்தர்முகத்தில் ஓர்வித ஆநந்தமுதிக்கும்.

உலகத்தில் பலவித ஜனங்களுளர். அவர்களின் சித்தவிருத்திகள் விதவிதமாயிருக்கும். ஒருவன் ஸுகி, மற்றொருவன் துக்கி. வித்வான்ஸாக விரும்புவோனும் நானே, மூடனாயிருந்து திரிபவனும் மனிதனே, பணக்காரனும் பாதையில் நடக்கிறான். ஏழையும் தெருவில் செல்கிறான். ஆரோக்யமுள்ளவன் ஆநந்தமாய் நடக்கிறான். நோயாளி நொந்து திரிகிறான். பலவான் பல்லைக் கடிக்கிறான். சக்தியற்றவன் சவத்தைப்போல் சரீரத்தை நிலத்தில் தள்ளுகிறான். இத்தகைய பேதாபேதங்களுக்கெல்லாம் மனமே காரணமாகும். குரோதம், பயம், ஆநந்தம், கர்வம், லஜ்ஜை, ஜடத்தன்மை, அபிமானம் முதலியவைகளால் தன்னுடைய பிரயோஜனத்தைக் கெடுத்துக்கொள்ளாதவனே விவேகி,

அன்னதானம் செய்பவனுடைய ஆகாரத்தைவிட அவன் செய்யும் ஆதரவே அதிக சிரேஷ்டமுள்ளது.

தோஷத்தில் புத்தியை நாட்டிப் பாழடைந்து பரதேசியான பிறகு மதியைக்கற்றுக்கொள்ள மனங்கொள்வார் மூர்க்கர். விவேகியோ ஸத்ஸக வாஸத்தால் சீர்திருத்திக் கொள்வதையே முக்கியமாய்க் கவனிப்பான். தோஷம், பாபம் முதலியவைகள் தன்னை யணுகாவண்ணம் ஜாக்கிரதையுடன் காலம் கழிப்பான்.

பரோபகாரம் செய்யாதவன் ஆத்மவஞ்சகன். ஸர்வ ஜீவராசிகளையும் தன்னைப்போல் பாவித்து சக்திக்கேற்ற ஸகாயம் செய்து ஆத்ம திருப்தியைப் பெறுவது அவசியம். தியாகபோகங்களைச் செய்ய மனமிசையாதவன் ஐச்வர்யவானா யிருந்தாலும் நிர்பாக்யனே யாவான்.

தைர்யத்தோடு கூடிய ஸூக்ஷ்மயோசனை ஸகல ஸாதகத்தையும் தரக்கூடியது. சோகத்தைப்போக்கவும், சத்துரு பயத்தை நீக்கவும், ஸந்தோஷம் நம்பிக்கைகளைக் கொடுக்கவும் ஸாதகமான தைரியத்தைப் பெற்றுள்ளவனே தன்யன்.

வேதங்களை ஓதிக்கிரகிப்பதால் ஞானம் உதயமாகிறது. ஞானத்தால் பாரமார்த்திக வழி தோன்றும். ஞானியின் நாமத்தை யுச்சரிப்பவர்களுக்குத் துக்கம் விலகி சாந்தமேற்படுகையில் உண்மையான அறிவைப்பெற்ற ஞானியின் பரமானந்தத்தை விவரிப்பது ஸாத்யமா? அத்வைதவிசாரம் செய்தாலன்றி அகங்காரபுத்தி விலகாது. ஞானோபாஸனை நமக்கு அத்யாவச்யமானது.

வினா.—யாரைக் குருவாய் பாவிக்க வேண்டும்?

விடை.—ஜெகத்பதியான ஈச்வரனை!

வினா.—ஸந்யாஸ ஆசிரமத்துக்கு அர்ஹனானவன் எவன்?

விடை.—உண்ண, உறங்க, உடுக்க விரும்பி முன் யோசனை செய்யாமலிருப்பவனே ஸர்வ சங்கரஹிதனாவான்.

வினா.—ஞானத்தில் பேதமுண்டா?

விடை.—எந்த ஞானத்தால் சித்தசுத்தி யுண்டாகிறதோ அதுவே ஸத்யஞானம். மற்றவை மித்யாஞானமாகும்.

வினா.—மனிதன் ஸுகமடைவதெங்கனம்?

விடை.—ஞான மார்க்கத்தால்.





ஹாலஸோர்க்கோடி என்று மொழிந்தாள் மங்கை. ஆனால் வண்டி கொண்டுவரச் சொல்லுகிறேன் என்று ஓர் ஸேவகனை அழைத்தான் பிரபு.

“ஐயா! நான் நடந்து வருகிறேன்.” என்று லலிதா கூறினாள்.

பைத்தியக்காரப்பெண்ணே! ஏன் பயப்படுகிறாய்? நீ நடந்தால் உன்னோடு நான் வருவதெங்ஙனம்? நான் நடந்து வராவிடில் நீ வீடு செல்வது ஸாத்யமா? யோசித்துப் பார்! இனி வண்டியிலேற ஆக்ஷேபிக்க மாட்டாயே என்று கேட்டான் கனவான்.

லலிதா பேசவில்லை.

வண்டி வந்தது. இரட்டைக்குதிரை வண்டியில் அவள் என்றும் ஏறினவளல்ல. நெஞ்சும் மார்பும் படபடவென்று அடிக்க சரீரம் நடுங்கி நின்றாள்.

ஏறு வண்டியில் என்று கனவான் கூற விதியில்லாமல் ஏறினாள் லலிதா. கனவானும் அதில் உட்கார்ந்தான். வண்டி சென்றது.

ஹாலஸோர்க் கோடியில் ஓர் வீட்டைக் காட்டி அங்கு நிறுத்தும்படி கூறினாள் லலிதா.

வண்டி நின்றதும் இருவரும் இறங்கினார்கள். தலைப்பில் முடிபோட்டிருந்த சாவியால் தெருக்கதவு பூட்டைத் திறந்தாள். இருவரும் உள்ளே சென்றனர். இருளைப்போக்க ஓர் விளக்கேற்றினாள் லலிதா.

மேகமண்டலத்தில் தோன்றும் சந்திரோதயத்தைப்போல் ஓர் மானிட ஸ்திரீ படுத்திருக்கக் கண்டான் பிரபு. இதென்ன அதிசயம். பெண்ணே! எனக்கு விளங்கச் சொல் என்று கனவான் கேட்டான்.

## கல்யாணியின் வல்லமை

சந்திரோதயமாகிறது. இப்பொழுது 3 மணி இருக்கும். இத்தனை நேரமாகியும் அவர் வாராத காரணமென்ன? எங்கு சென்றாரோ அறியேன். ஸாம்பா! தூங்குகிறாயா என்று கல்யாணி பதைபதைப்புடன் கேட்டாள்.

அக்கா! நீ ஏன் தவிக்கிறாய்? காலையானால்தானே வருவார். படுத்துறங்கு என்றான் ஸாம்பன்.

சீ! மதிகெட்டவனே! எஜமான் விச்வாஸம் உனக்குச் சற்றும்

இல்லை என்பதை நானறிவேன். வண்டி லாயம் சென்று ஆட்களை விசாரித்து வா என்று அதட்டினாள் கல்யாணி.

மனதுக்குள் வைதுகொண்டே ஸாம்பன் எழுந்து சென்றான்.

கல்யாணியின் யோசனை வெகுதூரம் ஓடிற்று. தன்னை உபகரிக்கும்படி நாடிவந்த பெண்ணை வீண் வம்புக்கிழுத்ததாலல்லவோ இத்தனை துன்பம். என்னைக் கண்டால் கணவர் ஏற்கனவே வெறுக்கிறார். எனக்கு வந்துள்ள வாழ்வு ஐச்வர்யாதிகள் யாராலென்பதை நான் அடிக்கடி மறந்து போகிறேன். என் புருஷருடைய பெரிய ஸகோதரியை நினைத்தால் எனக்குப் போஜனமுண்டு. அவ்வம்மணி ஸ்ரீசைலயாத்திரை சென்றிருக்கிறார். அவர் இங்கிருந்தாலும் என் துக்கத்தைச் சொல்லலாம். வேறு யாரிடம் முறையிடுவேன் என்று தனக்குள் ஆலோசித்துக்கொண்டிருந்தாள்.

ஸாம்பன் திரும்பிவந்து " அக்கா இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியோடு ஸந்தியாகாலம் சென்றவர் இன்னும் திரும்ப வில்லையாம்" என்று கூறினான்.

ஸரி. இன்னும் என்ன உண்டு ? சொல்லி அழுதுவிடு என்று கடுகடுத்தாள்.

ஸாம்பன் தமக்கையின் குணத்தை யறிந்தவனாதலால் வாய் பேசாமல் சென்றான் கல்யாணி,

கல்யாணியின் கோபம் காளிக்கும் இராது. ஐயோ ! என் தலைவிதியே என்று அலறி விழுந்தாள்.

அந்தப் பாழும் பெண் நான் செய்த கொடுமைகளைக் கூறியிருப்பாள். என் கணவருக்கு ஏற்கனவே என்னிடம் விச்வாசமில்லை. ஏழைக்குழந்தையை அடித்து விரட்டினதை யறிந்தால் என்னைவெறுப்பதுடன் வீட்டைவிட்டும் ஓட்டிவிடுவார். ஏதாவது ஒரு யுக்திசெய்து தப்பித்துக் கொள்ளவேண்டும். இச்சமயத்தில் பொய் புகல்வதால் தோஷமில்லை என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

ஆம். அரைநாழிகை சும்மா யிருக்கலாகாது. ஸாம்பனை அழைத்து ஆலோசிக்கிறேன். அவனும் கூடச் சொன்னால் சற்று நம்புவார் என்று ஏதோ நானாவித எண்ணங்கொண்டு "ஸாம்பா ! ஸாம்பா !" என்று அழைத்தாள்.





அக்கா ! என்ன விசேஷம் என்று ஸாம்பன் கேட்க, " தம்பி ! என் கழுத்திலுள்ள வைர அட்டிகையை இந்த நிமிஷமே நீ பத்திரப்படுத்திக்கொள். உன் அத்திம்பெயர் வருவதற்குள் நான் சொல்லுகிறபடி நீ செய்யவேண்டும். நேற்று வந்த பெண் மேஜையிலிருந்த அட்டிகையைத் திருடினதாகவும் அதைப்பற்றியே அவளோடு நாமிருவரும் அதட்டிக் கேட்டதாகவும் ஸாதிப்பது அவசியம். அவர் நம்பினாலும் நம்பாவிடினும் நமது காரியம் முடிந்துவிடும். தெரிந்ததா ? " என்று கூறி அவன் காதோடு சில வார்த்தைகளை ஓதினாள்.

இதற்குள் பொழுதும் விடிந்தது. வீட்டிலுள்ள ஆட்களெல்லாம் அம்மாளுடைய உடமையொன்று காணவில்லையே என்று ஏங்கிக் கொண்டே தேடலாயினர்.

கல்யாணியின் முகத்தில் சோகமும், துக்கமும் ஊஞ்சலாடின. உண்மையில் உடமை தொலைந்திருந்தால்கூட வியஸனமடைந்திராள். வீட்டிலுள்ளவர்களை அழைத்து விசாரிக்கலானாள். ஒவ்வொருவரும் தாங்கள் அறியோமென்று கூறிவிட்டார்கள். எஜமான் வரட்டும். உங்கள் கெதி யாதாகிற தென்பதை அறிவீர்கள் என்று கர்ஜித்துக் கொண்டே தன்னறைக்குட் சென்று படுத்துக்கொண்டாள். கொடியவர்களின் மனம் க்ஷணநேரம் அமைதியாயிராது. அவர்களின் எண்ணமெல்லாம் பிறரைக் கெடுப்பதிலேயே செல்லும். கல்யாணி ஸாமான்யர்களின் வீட்டில் பிறந்தவள் ஏழைவீட்டுப் பெண்ணாயிருந்தால் புருஷனிடம் அடங்கியிருப்பாளென்று சிலருடைய கொள்கை. அதனால் பரந்தாமனுடைய ஸகோதரி தனக்குப் புருஷன் வழியில் பந்துவான கல்யாணியைத் தனது தம்பிக்கு மணம் செய்துவைத்தாள். நாளடைவில் கல்யாணியிடம் மூர்க்ககுணம், துராலோசனை, அஸூயை, கோபாதிகள் வளர்ந்தன. தனமதத்தால் எல்லோரையும் திரஸ்காரமாய்ப் பேசுவாள். புருஷனான பரந்தாமனைக்கூட சில வேளைகளில் மனம வந்தபடி திட்டுவாள். அவளுடைய கொடுங்குணத்தைக் கண்டு அஞ்சாதவர்களில்லை. தாய் தந்தையற்ற பெண்ணாயிற்றே என்று பரந்தாமனுடைய ஸகோதரி அவளிடம் பக்ஷமே காட்டி வந்தாள்.

பரந்தாமனுக்கு இந்த விவாகத்தில் திருப்தி கிடையாது. ஆனால் என் செய்வது ? பெரிய பதவியிலிருக்கும் தானே நீதி தவறினால் மற்ற

வர்கள் கெடுவதற்கு வழியுண்டாகுமென்று பொறுமையை வகித்தான். மனதிலுள்ள வருத்தத்தை யாரிடம் முறையிடுவது.

கல்யாணி படுக்கையில் படுத்துப் புரண்டாள். என் நாதருக்கு முகத்தைக் காட்டும் முன் நான் மரிக்கலாகாதா என்று வாய்விட்டு முறையிட்டாள். ஒரு ஆயிரமா? இரண்டாயிரமா? பதினைந்தாயிரம் ரூபா பெறுமான வஜ்ரச்சரடாயிற்றே! விலைபெற்ற பொருளைக் கை தவறவிட்டேனே! என்னைக்கண்டால் என்ன செய்வாரோ என்று புலம்பினாள். அவள் படுக்கைக்குச் சென்ற காரணம் வீட்டு வாசலில் நின்ற வண்டியேயாகும். மணவாளன் வரும்முன் மயங்குவதுபோல நடிக்க எண்ணங்கொண்டு தன்னறையை நாடி நடந்தாள்.

காலை 7½ மணியிருக்கும். பரந்தாமன் திரும்பி வந்தான். ஸேவகர்களெல்லாம் வாடின முகத்துடன் நிற்பதை யறிந்து என்னவென்று விசாரித்தான். வைர அட்டிகை விஷயம் தெரிவிக்கப்பட்டது. வாய் திறவாமல் தன் ஆபீஸ் அறைக்குச் சென்றான்.

9 மணி வரையில் கல்யாணி கணவன் வருகைக்காக எதிர்பார்த்தாள். வராததால் அவனிருப்பிடம் சென்று துக்கமுகத்துடன் அட்டிகை காணாமற்போனதை விஸ்தாரமாய்த் தெரிவித்தாள்.

பரந்தாமன் அவளை ஓர்முறை விழித்துப் பார்த்து "கல்யாணி! இது என்ன ஸாகஸம்? விலைபெற்ற பொருளை ஓர் ஏழை எடுப்பாளாயின் அவள் அதை எப்படி விற்கமுடியும்? தட்டான், ஸாவுகார், வாங்குபவர் ஆகிய அநுகூல பாத்திரர்கள் கிடைக்கவேண்டுமல்லவா? க்ஷாத்திரத்தின்மேல் திருடியிருந்து யாராவது ஒளித்திருப்பார்களாகில் அவர்களுக்கு அதனால் வரும் லாபமென்ன? ஒவ்வொரு கல்லாய்ப் பெயர்த்து எடுத்தாலும் அதுவும் துன்பமாய் முடியுமே. உன் நகை எங்கும் போகவில்லை. உன்னிடமே யிருக்கவேண்டும். நல்லகாலம் உனக்குக் குறைந்ததால் புத்தி பற்பலவிதமாய் ஸஞ்சரிக்கிறது" என்று கூறினான்.

"பிராணநாதா! நான் பொய்சொல்லவில்லை. தாங்கள் அடியாளைக் கடிந்தது போதாது. எனக்குச் சிக்ஷை விதிப்பது அவசியம். நாதா! நான் மதியற்றவள். கழுத்தில் அணியலாமென்று மேஜையின் மேல் வைத்தேன். அதற்குள் அந்தப் பெண் வந்தாள். பூத்தொணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவள் திடீரென்று மேஜையை நோக்கினேன். பொருளைக்





காணவில்லை. அந்தச் சிறுமியை அதைப் பார்த்தாயா என்று கேட்டேன். அதற்குள் அவள் அழுது பாசாங்கு செய்து அலறி யோடலானாள். ஸ்வாமி! இதுதான் நடந்த ஸமாசாரம். என்னைத் தங்களிடம் ஒப்புவித்தேன். சிக்ஷித்தாலும், பக்ஷித்தாலும், ரக்ஷித்தாலும் தாங்களே எனக்குத் தெய்வம்" என்று கண்ணீர் பெருக நமஸ்கரித்தாள்.

"கல்யாணி! உன்மேல் குற்றம் சுமத்துவதைவிட என்னையே தப்பிதஸ்தனாக நினைக்கவேண்டும். உனக்கு இந்த வீட்டில் அதிக ஸ்வதந்திரம் கிடைத்திருக்கிறது. அதனால் உன் மனப்படி அனேக காரியங்கள் நடக்கின்றன. பட்டு வஸ்திரம் விற்கவந்த பாலிகை பதினையாயிரம் ரூபா பெறுமான நகையை எடுத்துச் சென்றாளென்பதும், நீ அதைப் பார்த்திருந்தும் அவளிடமிருந்து வாங்கிக்கொள்ள சக்தியற்றவளாய் நின்றேனென்பதும் எந்தமட்டில் உண்மையோ நீயே யோசித்துப் பார். உனக்கு நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். நீ கேட்கும் வழக்கமில்லை. நல்லதிருக்கட்டும். இன்றைய தினம் நான் சொல்லும் வார்த்தையை மெய்யென்று நம்பு. என்றைய தினம் வைர அட்டிகை என் கண்முன் வருமோ அன்று வரை நான் உன்னுடன் பேச மாட்டேன். அறிந்தாயா கல்யாணி! உன்னிடமுள்ள மற்ற நகைகளை இந்த க்ஷணமே என்னிடம் கொண்டுவந்து ஒப்புவிக்கவேண்டியது. மற்ற விஷயங்கள் என் ஸகோதரி வந்த பிறகு சொல்லப்படும். பதிற் பேசாமல் சென்று என் கட்டளையை நிறைவேற்று என்று பரந்தாமன் கோபத்தோடு பேசினான்.

நாதா! தங்களுக்கிது தர்மமா? என்று கல்யாணி அழுதாள்.

மறு வார்த்தை பேசாதே! மற்ற நகைகளை மரியாதையோடு கொண்டுவந்து கொடுத்தாலாயிற்று. இல்லையேல் அவமானத்துக்குள்ளாவாய் என்று மொழிந்தான்.

பரந்தாமனுடைய வார்த்தையின்படியே ஆபரணங்களடங்கியபெட்டியைக் கல்யாணி கொண்டுவந்தாள். கணக்குப் பார்த்துத் தன் வசத்தில் வைத்துக்கொண்டான் பிரபு.

## கடிதம் படித்தல்

என்னைப்பற்றி நான் யோசித்தேனாகில் எனக்கே ஆச்சர்யமாயிருக்கிறது. என் காலம் இனி எவ்விதமாய்க் கழியுமோ அறியேன்.

"பகவானை ஸ்மரிப்பவருக்கு அகமகிழ்ச்சியுண்டாகும்" என்று பெரியோர் சொல்வதுண்டு. நானும் அனேக புஸ்தகங்களைப் படித்திருக்கிறேன். ஸத்விஷயங்களைக் கிரகித்தும் வருகிறேன். என் விஷயத்தில் ஓர் பலனையும் காணேன். ஜீவனத்துக்கு வழிவேண்டுமே என்று திகைத்தேன். என் தாய் அதை எவ்விதமோ அறிந்து எனக்கொரு கடிதமெழுதி வைத்தார். அதைப் படித்தேன். எனக்குண்டான ஆச்சர்யத்துக்களவில்லை.

கண்ணே! லலிதா.

கவலைப்படாதே! எனக்குச் சிறுவயதில் படிப்புக் கற்றுக்கொடுத்த ஓர் தர்மவதி இந்த ஊரிலிருக்கிறாள். அவளிடம் சென்று நீ தைத்துள்ள உடைகளைக் காட்டு. ஸந்தோஷமடைந்து உனக்கு உபகாரம் செய்வதுடன் பல இடங்களையும் தெரிவிப்பாள். பூத்துணிகளால் வரும் பணத்தைக்கொண்டு நாமிருவரும் ஜீவிப்போம். இதில் அவமானமில்லை. வருந்தாமல் என் வார்த்தையின்படி செய்வாயாக. நான் கூறின புண்யவதியிடம் செல். எங்கே போனாலும் என்னைப்பற்றின ஸமாசாரத்தைக்கூறாமலிரு.

உன் அன்புள்ள தாய்.

இவ்விதமெழுதி தர்மவதி யிருக்குமிடத்தையும் குறிப்பிட்டார். அம்மாவின் கட்டளைப்படி சென்றேன். பக்ஷமுள்ள அவ்வம்மணி 10 ரூ. கொடுத்ததுடன் பாந்தாமர் கிருகத்துக்குச் செல்லும்படி வழி காட்டினார். துர்ப்பாக்யவதியான நான் அந்த வீட்டில் பட்ட பாட்டை நினைத்துக்கொண்டால் இன்னமும் துக்கமுண்டாகிறது. பிரபுவின் ஆதரவும், அவருடைய அன்பான வசனங்களும் என்னைச் சந்தோஷத்திலிருத்தின. என் தாய்க்கு இந்த விஷயங்களை எப்படித் தெரிவிப்பேன். அவரோ பேசுகிறதில்லை. செவிசாய்த்துக் கேட்பதும் கிடையாது. கண் திறந்து பார்க்கிறாரோ இல்லையோ அதுவும் ஸந்தேகம். அவருடைய அனுமதியின்றி நான் எந்தக் காரியமும் செய்ய முடியாதென்று கனவானிடம் கண்டிப்பாய்க் கூறிவிட்டேன். அவரும் மனம் நொந்து சென்றார். என்னை வெளியில் வாராதபடியும், ஜீவனத்துக்காகச் சிரமப்பட வேண்டியதில்லை யென்றும், தாமே என்னையும், என் தாயையும் தயவுடன் காப்பாற்றி வேண்டிய ஸகாயங்களைச் செய்வதா





யும், பிராண, மானங்கள் கெடா வண்ணம் பரிபாலிப்பதாயும் என்னிடம் சொன்னார். அவருடைய காருண்ய வார்த்தைகள் என் மனதை ஸ்வாதீனமாக்கிக் கொண்டன. அம்மணியிடம் சொல்லி அனுமதி பெறவேண்டும். அவர் சீக்கிரத்தில் திரும்பி வருவதாய்ச் சென்றார். வரும் முன் நான் தெரிந்து சொல்லுகிறேனென்று கூறியிருக்கிறேன். அன்னையோ அயர்ந்து நித்திரை செய்கிறார். இந்த ஸமயத்தில் என்ன பண்ணுவதென்று தோன்றவில்லை என்று லலிதா ஆலோசித்துக் கொண்டிருந்தாள்.

பாபாவென்று எழுந்தாள் படுத்திருந்த மாது. மகளிடம் வந்து அவளைக் கட்டியணைந்து ஓர் கடிதம் கொடுத்து முத்தமிட்டு மறுபடி தன் படுக்கைக்குச் சென்றாள். கடிதத்தைப் பிரித்துப் பார்த்ததில் அதிலிருந்த விஷயம்.

கண்மணீ!

என்னிடம் உனக்கு ஸமாசாரங்கள் பேசவேண்டுமானால் உன் மனதிலுள்ள விஷயங்களைக் கடிதத்தில் வரைந்து என் தலையணையின் கீழ் வைப்பாயாக. பதில் கொடுக்கிறேன்.

உன் தாய்.

லலிதா ஆச்சர்யமுற்றாள். தாயின் சொற்படி நடப்பது உசிதமென்று பட்டது. ஓர்கடிதமெழுதலானாள்.

என் அன்புள்ள தாயே!

தங்கள் கட்டளைப்படி உபாத்யாயனி வீடு சென்றேன். அவர் 10 ரூபா கொடுத்தார். பாந்தாமப்பிரபுவின் வீட்டைக் காட்டி அங்கு செல்லும்படி அம்மாதாசி கூறினார். நான் அவர் தெரிவித்தபடி போனேன். என்னைப் பிடித்த சனி அவர் மனைவியைக் கொண்டு என்னை வருத்தும்படி தூண்டிற்று. நான் துக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் பிரபுவந்தார். அவருடைய சாந்த வாக்யங்களால் திருப்தி யடைந்து இல்லம் வந்தேன். இனி நான் தனியே வரக்கூடாதென்றும், ஜீவனத்துக்கு வேண்டிய பொருளைத் தாம் தருவதாயும், மானத்துடன் காலக்ஷேபம் செய்யும்படியும் தெரிவித்திருக்கிறார். இதற்கு நாமிருவரும் ஸம்மதப் படாவிடில் சட்டப்படி நடந்து கொள்வதாய்க் கூறுகிறார். தர்மந்தவறாமல் தாம் ஸகாயம் புரிவதாய்ச் சொல்லுகிறார். நான் தங்களுடைய அனுமதி

யைப் பெற்ற பிறகு பதில் உரைப்பதாய்ப் பகர்ந்தேன். இந்த விஷயத்தில் தங்களுடைய அபிப்ராயத்தை எதிர்நோக்கும்.

லலிதா.

தாயின் கட்டளைப்படி தலையணையின் கீழ் வைத்தாள். சற்று நேரம் ஓர் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். நித்திரை வந்தது. கண்விழித்துக் கொள்ளும்பொழுது பகல் 11 மணியிருக்கும். யாரோ கதவிடிப்பது போலிருந்தது. எழுந்தாள். தாயின் கடிதமொன்று தன் மடியிலிருக்கக் கண்டாள். அதைக் கையிலெடுத்துக் கொண்டே வாசற் கதவைத் திறக்க வந்தாள்.

வந்தவர் தனக்குப் பரிச்சயமான பரந்தாமப்பிரபு என்று தெரிந்தது. மரியாதையுள்ள மங்கை அவரை உள்ளே வரும்படி கூறி கதவைத் தாளிட்டாள்.

லலிதாவின் கையில் கடிதமிருப்பதைக் கண்டு அதென்னவென்று பரந்தாமன் கேட்டான்.

நான் படித்த பிறகு தங்களிடம் சொல்ல முடியுமானால் தெரிவிக்கிறேன் என்று கூறி லலிதா உள்ளே சென்று படிக்கலானாள்.

குழந்தாய்!

உன்னைக் கடவுள் காப்பாற்றுவாராக! வந்துள்ள பிரபு தர்மவானாயிருக்கலாம். அநாதைகளை ஆதரிப்பதில் அபிமானமுள்ளவராகவும் இருக்கலாம். அவர் கட்டளைப்படி நீ நடந்தாலும் பாதகமில்லை. ஆனால் ஒரு விஷயம் சொல்லுகிறேன். அதை மறவாமல் மனதில் வைத்துக்கொள்.

என் செல்வமே!

யுவதியான உன்னைக்கண்டு அவர் பிரேம மோகாதிகளைக் கொண்டிருக்கிறார். அதனால் வழுவில் ஸஹாயம் செய்ய மனங்கொண்டார். எந்த விதத்திலும் உன்னைத் தமது வசமாக்கிக்கொள்ளவே பார்ப்பார். நீ ஏழைப்பெண். தாய் தந்தையர் இருந்தும் திக்கற்றவளானாய். கண்களிருந்தும் காந்தியில்லாதது போல் வித்யா, புத்தி, ரூபாதிகளைப் பெற்றிருந்தும், பணமில்லாத தரித்திரையாயிருக்கிறாய்.

என் அன்பே!





## முதல் அங்கம்

### மூன்றாம் காக்ஷி

இடம்.—ராணிவாஸம்.

காலம்.—பகல்.

பெரியராணி விரதமனுஷ்டிக்கிறாள். ராஜஸ்திரீகளும், புரோகிதர்களும், தாதிகளும் தெய்வத்யானம் செய்கின்றனர்.

பெ. ரா.—குமுதம்! எல்லோரும் வந்திருக்கிறீர்களா? பானுமதி எங்கே! அவளை யாரும் அழைக்கவில்லையா?

கு.—அம்மணி! நாங்கள் அவளைக் காணச் சென்றோம். எங்களை ஏன் வந்தீர்களென்றுகூட கேட்கவில்லை. விரத விஷயமாய் அத்தையம்மாள் அழைத்துவரச் சொன்னாரென்று கூறியும் அவள் பதிலுரைக்கவில்லை.

பெ. ரா.—ராதா! இது மெய்தானா?

ரா.—ஆம் அம்மா! உண்மையே.

பெ. ரா.—சம்பகா! எதற்காக பானுமதி அவ்விதமிருக்கிறாள்?

ச.—தாயே! தமது குமாரரைக் காணாத துயரமாய்.

பெ. ரா.—இதென்ன அதிசயம்! விக்ரமாதித்யன் வேட்டைக்குச் சென்றில்லையா? அவனுடைய மனைவிகளெல்லாம் இவ்விதம் வருந்தக் காணோமே!

எல்லோரும்.—அம்மணி! இந்த விஷயத்தைச் சொல்ல நாங்கள் இதுவரையில் பயந்திருந்தோம். இன்று தாங்களாய்க் கேட்டதின்பேரில் கூறுகிறோம்.

பெ. ரா.—என்னதான் சொல்லுகிறாள். க்ஷத்திரியனாய் இருந்தால் யுத்தத்துக்குச் செல்வதும் வேட்டைக் கேகுவதும் ஸஹஜமல்லவா? போனவிடத்தில் என்ன காரியம் நேரிட்டதோ. அதன் பொருட்டே தாமதமாய் வருகின்றனர். நல்லதிருக்கட்டும். நான் அழைத்துவரச் சொன்னதாய்க் கூறி பானுமதியைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்.

எல்லோரும்.—அப்படியே அம்மணி! இதோ செல்கிறோம்.

(எல்லோரும் போதல்)

பெ. ரா.—(தனக்குள்) ஹா! மெய்யாகவே பதிக்காகத் துயரப்படுகிறாளா? அல்லது கபடவேஷமோ! ஆனால் அவள் அறிவுள்ளவள்.

ஸத்யவிரதை. பதியிடம் பிராணனை வைத்திருப்பவள். மனத்துணிந்தால் மாதர்கள் விரக்தியாயிருப்பது ஆச்சர்யமல்ல. மனமே ஸகலத்துக்கும் காரணம், பந்தனம், விமோசனம் இவைகளை மனமே ஏற்படுத்துகிறது. (தூரத்தில் ஓர் உருவம் வருவதைக் கண்டு) யாரங்கே! இது என்ன நடை?

**உருவம்.**—இது அன்னநடை, பின்னலிடை, சின்னவிடை, இன்ன வடை, என்ன அடை?

**பெ. ரா.**—யாரது? இங்கே என்ன வேலை! விளையாடும் சமயமா இது. இங்கே தேவதார்ச்சனை நடக்கிறது பத்திரம்.

**உருவம்.**—நா உருவம். பக்ஷணங்களை புஜிக்கும் தொழில். கை வாய்களுடன் யுத்தம் செய்யும்பொழுது பக்ஷணார்ச்சனை நடப்பதால் பத்திரம் கொடுக்க வந்தேன்.

**பெ, ரா.**—(கோபத்துடன்) ஸகி! இது யார்? முகமெல்லாம் மூடிக் கொண்டிருக்கிறது. முக்காட்டைத் திறந்துபார். பிறகு சிக்ஷிப்போம்.

**உருவம்.**—அம்மணீ! நான்தான். கோஷா ஸ்திரீகளிருக்குமிடத்தில் நானும் முகமூடி போட்டுக்கொண்டு வந்தேன். முகமூடியைத் திறந்தேன். ரக்ஷியும் (மூடியைத் திறந்து சிரிக்கிறான்)

**பெ. ரா.**—(கனைத்து) சந்திரா! நீயா இவ்விதம் செய்தாய்? உன்னையல்லாமல் வேறொருவருக்கு இந்தத் தைரியம் வருமா? நீ ஏன் இங்கு வந்தாய்? சீக்கிரம் செல், பானுமதி வரப்போகிறாள்.

**ச.**—அம்மணீ! அந்தம்மாள் வந்தால் என்னைப்பார்த்துத் தண்டிப்பாரா! அவருடைய கண்கள், அங்க அவயவங்கள், மனம், ஹிருதயம், ஆகிய இவைகளெல்லாம் காட்டிலுள்ள மந்திரியிடமல்லவோ சென்றிருக்கின்றன. காற்றுலாவும் சரீரம் மட்டும் தங்களெதிரில் வரப் போகிறது.

**பெ. ரா.**—சீ! சும்மாயிரு. பிதற்றாதே: (தனக்குள்) என்ன? வேலைக்காரனுக்குக்கூட பானுமதியின் மனோநிலைமை தெரிகிறதே! நான் அறியாமற்போனது ஆச்சர்யமேயாகும். ஏன் அவள் வரவில்லை. என்மேலும் வெறுப்பைக் காட்டுகிறாள் போலும்.

[பானுமதியும் இராஜாமணிகளும் வருகின்றனர்]

**எல்லோரும்.**—அம்மணீ! வந்தனம். இதோ தங்களுடைய மருமகள் வந்திருக்கிறார்.





**பா.**—[நமஸ்கரித்து] அம்மா! என்னை யழைத்துவரச் சொன்ன காரணம் யாதோ! தெரிவித்தால் அடியாள் மனம் திருப்தியடையும்.

**பெ. ரா.**—குழந்தாய்! மங்களமுண்டாகுக. இன்றைய விரதத்தில் நீ கலக்காமலிருந்ததைப்பற்றி எனக்கு வருத்தமாயிருந்தது. அதனால் உன்னை யழைத்துவரச் சொன்னேன். உன் உடம்பு மெலிந்து நிலை கலைந்து ஸந்தோஷமிழந்து களை குறைந்து போகக் காரணமென்ன? உன் மனதிலுள்ள குறையைச் சொல்லலாகாதா?

**பா.**—தாயே! நான் சொன்னால் உங்களுக்குத் திருப்தியாயிருக்கும் போலும். இரண்டு வருஷங்களாய்த் தங்களுடைய குமாரர் இந்த வழியை மறந்திருக்கிறார். அவரில்லாமல் நான் ஸந்தோஷமாயிருப்பதெங்ஙனம். வாஸனை, ஸுகந்தம், புஷ்பம் முதலிய மனோகர வஸ்துக்களை நான் அவரில்லாத காலத்தில் உபயோகப்படுத்துவது தர்மமாகுமா?

**பெ. ரா.**—கண்ணே! கணவன் உயிரோடிருக்கையில் ஸுமங்கலிகள் மங்களத்திரவியங்களை வெறுப்பது தர்மமா? நீ ராஜகுமாரியாயிருந்தும் இவ்விதம் செய்வது அழகா? உன் பதி வரும்வரையில் நீ உபவாஸம் செய்து உடம்பைக் கெடுத்துக்கொள்ளும் வழியைத் தேடுகிறாய் போலும். நான் உனக்குத் தாயல்லவா? என் வார்த்தையைக் கேள். இனி இவ்வித மிராதே. ஸந்தோஷ ஸம்பிரமாதிகளில் எல்லோருடனும் கலந்து காலத்தைக் கழிப்பாயாக.

**பா.**—அம்மணீ! தாங்கள் என் கணவருக்குத் தாயானபொழுதே எனக்கும் தர்மமாதாவாயினீர். தாங்களறியாத தர்மமல்ல. யாருக்காக என் தேகம், மனம், ஆத்மா முதலியவைகள் ஏற்பட்டனவோ அவர்களுக்கே அவைகள் சொந்தமாகும். தர்மத்தை யறிந்தவர்கள் காலாகாலங்களில் நடக்கும் விதத்தை யனுஸரித்து வாழ்நாளைக் கழிப்பார்கள். பதிதர்மத்தை யனுஸரிக்கும் பாமினிகள் நாதனில்லா காலத்தில் நகையணிந்து நகைபுரிந்து நாகரிக ஸந்தோஷத்தை யனுபவிக்க மனமொப்பார்கள். ஆகையால் மன்னித்தருளவேண்டும்.

**எல்லோரும்.**—அதிசயந்தான். கலியுக சுமங்கலிபோலும். கடவுளாய் இவளை வணங்கினாலும் பாதகமில்லை. சற்சிலையாய் கோயிலில் வைக்கலாம். [ஒருவரை யொருவர் பார்த்து சிரிக்கின்றனர்.

**பெ. ரா.**—[கோபத்துடன்] பெண்களே! உங்களுக்குப் பரிஹாஸ

மாயிருக்கிறதுபோலும். ஓர் உத்தம பத்நி நடக்கும் விதத்தை யனுஸரித்தால் குற்றமென்று கூறுகிறீர்கள். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உங்கள் மனதில் பதியைப் பிரிந்திருப்பதைப் பற்றி பரமாநந்த மடைகிறீர்களென்று விளங்குகிறது. இதனால் உங்கள் உள்ளந்தரங்கம் வெளியாகிறது. ஸாவித்ரீ தேவியைப்போல் ஸாத்வீமணியான பானுமதியைப் பற்றி யாராவது நிந்தையாய் வசனிப்பீர்களாகில் ராஜாஞ்ஞைக்கு உட்படுவதுடன் என்னுடைய பிரியத்தையும் இழந்து விடுவீர்கள். பேதைகளே! வெகு நாட்களாய் நீங்கள் மனம் வந்தபடி அவளைப்பற்றி வசனிக்கிறீர்கள். நான் சிறுமிகளாயிற்றே! விளையாட்டாகப் பேசுகிறீர்களென்று எண்ணினேன். இன்று என்முன் பயமில்லாமல் இஷ்டப்படி வார்த்தை யாடுகிறீர்கள் மரியாதையாயிருங்கள்.

**எல்லோரும்**—[பயத்துடன்] அம்மணீ! மன்னியுங்கள். புத்தி வந்தது. கோபிக்க வேண்டாம். [பணிகின்றனர்]

**பெ. ரா.**—ராஜ குமாரிகளே! அடக்கம் அறிவுகளுடன் வாழக் கடவீர்களாக. [ஓர்புறம் திரும்பி] புரோகிதர்களே மங்களாரத்தி செய்யுங்கள். பகவத்பூஜை ஸம்பூர்ணமாகட்டும். எல்லோரும் காத்திருக்கிறார்கள்.

**பு.**—அம்மணி! அப்படியே செய்கிறோம்.

[கற்பூரத்தை ஏற்றி ஸ்வாமிக்குக் காட்டுகின்றனர்]

**பெ. ரா.**—என் செல்வங்களே! மங்களம் பாடுங்கள். நான் போகிறேன். பானுமதீ! நீயும் மங்களகீதம் பாடி உன் அந்தப்புரம் செல்லக் கடவாய்.

[போகிறாள்]

**எல்லோரும்.**—அம்மா! பிழைத்தோம். மாமிக்கு வந்த கோபம் ஓர்விதமாய்த் தணிந்தது. ஒருவரைப்பற்றி பேசினதின் பலனல்லவோ நம்மை வருத்தத்துக்குட்படுத்திற்று.

**முதல் ஸ்திரீ.**—ஆம்! ருத்திராக்ஷ பூனை வேஷம் போட நமக்குத் தெரியவில்லை. கற்றிருந்தால் வார்த்தை கேட்டிருப்போமா!

**இரண்டாம் மாது.**—ஸரிதான். ஸதீசிரோமணி, ஸாத்வீமணி, சாந்தாமணி என்றழைக்க நமக்கு யாருளர்.





**மூன்றாம் பெண்.**—ஆம். பதிவிரதா தர்மம் கற்று பதியின் பிரிவைக் கோரி பாசாங்கு செய்பவர்களுக்கே பரிவு ஏற்படுகிறது.

**நான்காம் ஸ்திரீ.**—போதும் பிரஸங்கம். மறுபடி கலகமுண்டாகும். மாமி வருவார். நாம் பூமிக்குள் புதைபடவேண்டியதுதான்.

**ஐந்தாம் மாது.**—வாயைத் தைத்துக்கொண்டாலும் நலமே. கண்டதைக் கேட்டதைச் சொல்லவும் பயமாயிருக்கிறது.

**சந்திரன்.**—ஏனம்மா! பாடாமல் பேசுகிறீர்கள். பூஜை முடிந்தால் புஜிக்கும் பொருள் எனக்குச் சொந்தமாகும். என்னேரம் காத்திருப்பது.

**எல்லோரும்.**—உன் வயிற்றைச் சொல். எங்கள் வயிற்றெரிச்சலைக் கூட கவனிக்காமல் உனக்குப் பயப்படவேண்டும்.

**ச.**—ஆம். மங்களம் பாடுங்கள். இல்லையேல் நான் கானம்செய்கிறேன். [கூகூ என்று கத்துகிறான். எல்லோரும் சிரிக்கிறார்கள்.] —

**பா.**—சசா. சசா! [எழுந்து செல்கிறாள்.]

**எல்லோரும்.**—தேவதை மறைகிறது. நாமும் செல்வோம்.

காக்ஷி முடிகிறது. [போகின்றனர்.]

நான்காம் காக்ஷி.

**இடம்.**—அந்தப்புரம். காலம்.—காலை.

பர்த்ருஹரி குதிரையில் ஸவாரி செய்துகொண்டே தாயின் அந்தப்புரம் வருகிறான்.

**ப.**—ஆகா! என்ன ஆச்சர்யம். மனிதனுடைய மனம் ஓர் காரியத்தில் சென்றால் அது முடியும்வரை மற்றொன்றில் பிரவேசியாது போலும். எத்தனை நாட்களாயின. என் அருமை மனைவி, அழகிய அங்கனை, அன்புள்ள அனங்கு. இப்ப ஸுந்தரி, உத்தம குணமணி, உயர்குல வநிதை என்னைப்பற்றி என்ன நினைக்கிறாளோ! இதுவோ வஸந்தகாலம். மனிதர்களின் மனம்மகிழ்ச்சியாயிருக்கும் ஸமயம். ஸுந்தரிமணி என்னைக்காணாமல் வருந்துவாளே! அவளை விட்டு அகலும் காலத்தில் அழகிய கண்களில் ஆநந்த பாஷ்பம் சொரிய "நாதா" நீர் இங்கிருந்து சென்றால் அடியாளை மறந்தே விடுவீர். பிறகு எத்தனை நாள்கழித்து நினைத்துக் கொள்வீர்களோ! அதை ஈசனே அறிவார் என்று கூறினாள். "அப்படி நினையாதே! உன்னை விட்டுப் பிரிந்திருப்பேனோ" என்று அவளை ஆதரித்தேன். என் வார்த்தை பொய்யாகவும், அவள் சொல்

மெய்யாகவும்முடிந்ததைப்பற்றி நிந்திக்கிறேன். இதோ ஊர் தெரிகிறது. என் அன்னையை தரிசித்து பானுமதியிடம் செல்கிறேன். (அரண்மனைக்குட் சென்று) அம்மணீ! அடியேன் நமஸ்கரிக்கிறேன். (பணிகிறான்)

பெ. ரா.—குழந்தாய்! என் கண்மணியே! நீடூழி வாழக்கடவாய். ஏது இத்தனை நாட்களாகியும் நீ வரவில்லை. முதலில் உன் மனைவியைப் பார்ப்பாயாக. பிறகு என்னோடு பேசக்கடவாய்.

ப.—என் அம்மணீ! தங்களைவிட அவள் உயர்ந்தவளா? என்னைக் காணாமல் தவித்த தாயாகிய உங்களைத் திருப்தி செய்தபிறகே மற்றவர்களை கவனிக்கவேண்டிய வனாயிருக்கிறேன். அரண்மனையி லுள்ளவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா! ராணிவாஸத்தார் ஸௌக்யந்தானா?

பெ. ரா.—எல்லோரும் ஸௌக்யமாயிருக்கிறார்கள். என் வார்த்தையின்படி நீ உன் பத்தினியைப்பார். இல்லையேல் நான் அவளை அழைத்து வருகிறேன். (போகிறாள்)

ப.—என் ஜெனனியின் குணம் யாருக்கு வரும். மனிதர்களின் மனதை அவள் அறிவதுபோல் வேறொருவராலும் முடியாது. என் பாக்யமே பாக்யம்.

பானுமதி வருகிறாள்.

பா.—பிராணநாதா! நமஸ்கரிக்கிறேன்.

ப.—கண்ணே! ஏற்றுக்கொண்டேன். என் தாயாரெங்கே?

பா.—அந்தப்புரத்திலிருக்கிறார்.

ப.—நீ அவரைப் பார்க்கவில்லையா?

பா.—அவர் என்னை அனுப்பினார் தங்களைக்காணும்படி.

ப.—உம்! (முகத்தைச் சுளித்துக்கொள்கிறான்.)

பா.—பிராணநாதா! என்ன ஒருவாறாயிருக்கின்றீர். அடியாள் தங்களைப்பார்க்க வந்ததில் பிரியமில்லை போலும், இதோ செல்கிறேன். (போகமுயல்கிறாள்.)

ப.—(தன் கரங்களால் தடுத்து) கண்ணே! என்னைக்கண்டு வார்த்தையாடாமலும், உபசரியாமலும் போகிறாயே! இதுதான் உனது கடமையோ!

பா.—ஸ்வாமீ! அடியாளைக் கண்டவுடன் முகத்தைச் சுளித்துக்





கொண்டு உம் என்று கூறுவதுதான் புருஷ ஸ்வபாவம் போலும். புதிதாய்க் கற்றுக்கொண்ட வித்தை என்று தெரிகிறது.

ப.—கண்ணே! அப்படி யொன்றுமில்லை. என் தாய் தன் ஸந்தோஷத்தைக் கருதாமல் உன் மனக்குறையை நீக்கும் மார்க்கத்தை முதலில் தேடினார். அவருடைய திவ்யகுணத்தை நினைத்து மகிழ்வதற்குள் அந்தப்புரம் சென்றுவிட்டாரே என்று வருந்தினேன். உன்மேல் எனக்கு ஆயாசம் ஒருபொழுதுமில்லை.

பா.—நாதா! பிரயாண உடையுடனிருக்கிறீர்களே! மறுபடி போகவேண்டுமா! குதிரையும் நின்றிருக்கிறது. போகும் ஸமயம் தெரிவித்தால் நலமாயிருக்கும்.

ப.—பானுமதீ! என்னைப் பரிஹஸிக்கிறாய் போலும். உன்னை விட்டுப்பிரிந்தது முதல் ஓர் நிமிஷங்கூட ஓய்வு ஒழிவுகள் கிடையா! மனம் மட்டும் உன்னிடமே வஸித்தது. என்னைக் கோபியாதே! கண்ணே!

பா.—பிராணநாதா! புருஷர்கள் எதைச்செய்தாலும் பாதகமில்லை. தப்பித்துக்கொள்ளும் ஸாமர்த்தியம் அவர்களிடம் உண்டு. ராஜகாரியங்களில் தங்கள் மனம் புகுந்தால் மாற்ற முடியுமா!

ப.—(மனைவியை உற்றுப்பார்த்து வாடின முகத்தோடு) என் அன்பே! உன் உடம்பு இவ்வித நிலைமைக்கு வரும்படி செய்தவன் நானேயல்லவா? கோமளாங்கியான நீ என்பொருட்டு உயிரை மாய்த்துக்கொள்ள விருந்தாய்! இதென்ன உடை? தலையின் கோலத்தைப் பார்க்க ஸகிக்கவில்லையே! நீ தபஸ்வினியா? ராஜமஹிஷியா? இப்படியும் செய்யத் துணிந்தாயே! (கண்ணீர் விடுகிறான்.)

பா.—பிராணேசா! நீங்கள் வருந்தலாமா! (கண்ணீரைத்தன் புடவையால் துடைத்து) எழுந்திருங்கள். ஸ்நான ஸந்தியாவந்தனாதி கர்மங்களைச் செய்து ஆகாரமுண்ண வாருங்கள். அடியாள் ஊழியம் செய்யக் காத்திருக்கிறாள்.

(தெருவில் ஏதோ கூக்குரல் கேட்கிறது.)

ப.—பிரியே! அதென்ன ஓசை. சாளரத்தின் வழியே பார்ப்போம். ஏதோ விசேஷ சப்தம்போல் தோன்றுகிறது.

(இருவரும் பார்க்கிறார்கள்)

பா.—பிராணநாதா! ஓர் ஸ்திரீ தன்பதி இறந்ததைக் கண்டு உடன் கட்டை ஏறியிருக்கிறாள். சவத்துடன் அவள் செல்வதைக் காண ஜனங்கள் ஓடிவருகின்றனர். இதுதான் ஓசை.

ப.—பானுமதி! என்ன அலக்ஷ்யமாய்ச் சொல்கிறாய். இத்தகைய காரியங்களைக் கண்டு எல்லோரும் ஆச்சர்யப்படுவார்கள். புருஷனிறந்தால் மனைவி அவனுடன் சிதையில் மடியத் துணிவது அதிசயமன்றோ? எல்லா மாதர்களுக்கும் அவ்விதம் செய்ய மனம் வருமா? உத்தமிகளுக்கே அத்தகைய பதவி கிட்டும். மகா பதிவிரதை செல்வதைக் காண மனிதர்கள் ஒருவரையொருவர் தள்ளி ஓடுகின்றனர்.

பா.—ஜீவேசா! இதைக்கண்டா ஆச்சர்ய முற்றீர். புருஷன் மரித்து பந்துக்கள் புலம்பி பாடையில் கட்டி பலபெயர் தூக்கி மயானம் வரையில் சென்றபிறகு பத்தினி பிராணனை விடுவாள்போலும். உத்தமியாயிருந்தால் பர்த்தா மடிந்ததைக் கேட்டவுடன் உயிரை விட்டிருக்க மாட்டாளா? அதல்லவோ உண்மையுள்ள பிரீதியாகும். பதி செத்து சுடுகாட்டில் கால்வரும் அறிய சிதை ஏறியிருப்பவர்கள் பெருமைக்குப் பாடு படுபவர்களேயாவர்.

ப.—பிரியே! நீ சொல்வது அதிக ஆச்சர்யம். உலகத்தில் அப்படி நடந்ததுண்டா? இராதென்றே நினைக்கிறேன்.

பா.—ஹிருதயேசா! புருஷர்கள் அவ்விதம் சொல்வது ஸகஜமே. ஸத்யவதிகளான ஸ்திரீகள் ஆவியை விடுவதும் ஸ்வபாவமே.

ப.—நான் நம்பமாட்டேன் கண்ணே! வேடிக்கையாகச் சொல்கிறேன். நான் மடிந்தால் நீ சொல்வதுபோல் உயிரை விடுவாயா?

பா.—[சிரித்து] பூஜ்யதை பெற்ற புண்யபுருஷா! என்னைப்பற்றி நான் கூறுவேனெனில் தற்புகழ்ச்சியாகும். தெய்வீகமாய் தங்களுடைய வியோகம் நேர்ந்தால் ஓர் விநாடி கூட இந்த உலகத்திலிரேன்.

ப.—கண்மணியே! இந்த வாதம் கிடக்கட்டும். நான் ஸ்நானம் செய்ய வேண்டும். நீ அதற்கு வேண்டிய வெந்நீரைச் சேகரிப்பாயாக.

பா.—ஆர்யபுத்திரா! நான் செல்கிறேன். சீக்கிரமே வாருங்கள்.

[போகிறாள்.]

ப.—என்ன! இவள் சொல்வது உண்மையா? கபடமா? என்னை ஏமாற்றுவதற்காக இவ்விதம் சொல்லியிருப்பாளா? பல சாஸ்திரங்



142392.

# ஞானசந்திரிகா

இது சில வருஷங்களுக்கு முன் மாதப்பத்திரிகை ரூபமாய் வெளிவந்து ஜனங்களின் பிரியத்தைக் கவர்ந்துகொண்டிருந்தது. சிற்சில அசந்தர்ப்பங்களால் நடவாமல் நின்றது. தற்காலம் இதை அடியிற் கண்ட விதமாய்ப் பிரசுரப்படுத்த தீர்மானித்திருக்கிறோம்.

வேதாந்தம், நீதியைப் புகட்டும் நாவல், பக்தியைக் கொடுக்கும் நாடகம் ஆக மூன்று பாகங்களைக்கொண்ட ஓர் புஸ்தக ரூபமாய் வெளிவரும். ஒரு வருஷத்தில் சேரும் பிரதிகளைத் தனித்தனியே பிரித்து வேதாந்த புஸ்தகம், நாவல், நாடகங்களாய்ப் பயிண்டு செய்துகொள்ளலாம்.

பெண்கல்வி, ஸத்ஸங்கம், தர்மமார்க்கம், விநய ஸம்பாஷணை, பரோபகாரம், ஜீவகாருண்யம், ஸ்நேகவாஞ்சை, மாதாபிதாக்களிடம் மக்கள் நடந்துகொள்ளும் முறை, பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமை, ஸகோதரப் பிரேமம், பந்துப்பிரியம், ஸதிபதிகளின் ஒற்றுமை, ஆத்மதத்வம், ஈச்வரபக்தி, மஹாத்மாக்களின் மகிமை ஆகிய அநேக ஸத்விஷயங்களை விளக்கும் "ஞான சந்திரிகா" என்னும் அருமைக் கிரந்தத்தை ஒவ்வொரு ஸகோதர ஸகோதரியும் வாங்கி வாசிப்பார்களாக.

செந்தமிழ் நடையில் சிறுவர் சிறுமிகளும் படித்து ஆனந்திக்கும்படி எழுதப்பட்டு, உயர்ந்த காகிதத்தில் அழகிய அக்ஷரங்களுடன் புஸ்தகம் சோபிக்க அச்சடிக்கப்பட்டிருக்கும். இதில் வரும் விஷயங்கள் மனச்சாந்தத்தைத் ஸதா விளைத்துக்கொண்டிருக்கும். வேதாந்த பாகம் மனிதர்களுக்கு மிகுந்த திருப்தியைத் தருமென்பதிற் சந்தேகமில்லை.

"நிரஞ்சனை" என்ற நவீன நாவல் மனோத்ஸாகத்தைத் தந்து மானவ ஸதிபதிகளைத் தர்மமார்க்கத்தில் நடக்கச் செய்யும். தற்கால நாகரீகத்தை யதாஸ்ரித்தும் முற்கால வைதீக ஆசாரங்களை விடாமலும் ஆரிய மாதர்களின் பதிவிரதா பரிபாலன மகிமையை விருத்திப்படுத்தும் விதத்தைக் கற்பிக்கும் மாதிரியாக வரையப்பட்டிருக்கிறது.

"பர்த்ருஹரி" இதை நாடகமாய் எழுதியிருக்கிறது. இந்தியாவில் அரசாண்ட விக்ரமாதித்யனுடைய ஸஹோதரனே பர்த்ருஹரி என்பவன். உத்தமியான இவ்வரசனுடைய மனைவி பானுமதியின் பதி பக்தி உலகத்தோரால் மெச்சத் தகுந்தது. அந்த மேதாவியான அரசனிடம் அவன் காட்டிய அன்பு, பக்தி நடத்தைகள் ஒவ்வொரு ஆரிய குடும்ப மாதர்களும் அறியவேண்டியது அவசியமாகும்.

அனுவச்யமான விஷயங்கள் "ஞானசந்திரிகா" வில் வெளியாகா. இதன் வருஷ சந்தா 1—4—0 ரூபாய் ஆகிறது. வேறு தபாற்செலவில்லை. இதை வாங்கும் ஒவ்வொருவருக்கும் மெஸர்ஸ் R. K. சர்மா & கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட ராஜதம்பதிகளின் படம் 1, இனாமாய்க் கொடுக்கப்படும்.

மேற்கண்ட 3 புஸ்தகங்களையும் தனித்தனியே வாங்குவோர்களுக்குப் புஸ்தகமொன்றுக்குத் தபாற்செலவுடன் 12 அணா வீதம் வி. பி. யில் கிடைக்கும்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாஸத்துக்கு எழுதினால் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும்.

பண்டிதை-விசாலாக்ஷி யம்மாள்,

எடிடர், ஹிதகாரிணி, மயிலாப்பூர், மதராஸ்.

Madras: G. C. Loganadham Bros, The Guardian Press, Mount Road